# மாதிரித் தேர்தல் நடத்தை விதிமுறைகள்

## மாநில தேர்தல் ஆணையம்
## புதுச்சேரி
**2021**

**"ஒவ்வொரு வாக்கும் மதிப்பிற்குரியது**

ராய் பி. தாமஸ், IFS (ஓய்வு)
மாநிலத் தேர்தல் ஆணையர்
புதுச்சேரி.

மாநிலத் தேர்தல் ஆணையம்
புதுச்சேரி.

# முன்னுரை

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் 15 ஆண்டுகளுக்குப்பின் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தல் நடத்துவதில் விடுதலையான மற்றும் வெளிப்படையான சூழலை உருவாக்குவதன் மூலம் மக்களிடையே ஜனநாயக அமைப்புகள் மீது உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில் புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையம் இயன்ற வரையில் கடுமையாக உழைத்துவருகிறது. இந்த ஆணையம் அரசமைப்புச் சட்ட வரையறைக்குள் தேர்தலில், தேர்தல் தொடர்புடைய அனைத்துப் பிரிவினரையும் நேர்மையான முறையில் பங்கேற்கச் செய்வதற்கான விரிவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இது தொடர்பாக, புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையம், 'மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள்' என்னும் கையேட்டைக் கொண்டுவருகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது, தேர்தல் அலுவலர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோருக்கு மட்டும் பயன்படுகின்ற ஒன்றல்ல, பொதுவாக, வாக்காளர்கள் அனைவருக்கும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்து தெளிவைத் தருவதும் ஆகும். இது வாக்காளர்களுக்கு தேர்தல் களத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் சரியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைத் தருகிறது. தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் தங்களுடைய எல்லாத் திறன்களையும் (ஆதாரங்களையும்) திறமையான முறையில் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பதால் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து அரசியல் கட்சிகளும் இதனைப் போற்றி வரவேற்கின்றன.

இந்த நடத்தை விதிகள், உண்மையிலேயே, தேர்தலில் ஈடுபடும் எல்லோருக்கும் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்றும், இது அனைத்துத் தேர்தல் பங்கேற்பாளர்களிடத்திலும், தன்-கட்டுப்பாடு மற்றும் நாகரிகம் மிக்க ஒரு சமூகத்தின் தர-அடையாளமாக விளங்கும் நன்னடத்தை விதிகளை மதித்துத் தன்னார்வத்துடன் அதற்கிணங்க நடக்கும் உணர்வை உட்புகுத்துவதால், இது உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடையப் பயன்படும் என்றும் என நான் நம்புகிறேன். மக்களுக்காகத் தொண்டாற்றப் பெருவிருப்பத்துடன் மக்கள்

பிரிதிநிதிகளாகத் தேர்தல் களமிறங்குவோர், நடத்தை விதிகளைக் கடைப்பிடித்தல் மற்றும் அதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்தல் ஆகிய மதிப்புமிக்க பண்புகளை எவ்வாறு கொண்டுள்ளனர் என்பதை மக்களிடம் வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்குத் தேவையான ஒன்றாக இது உள்ளது.

தேர்தலின்போது ஏற்படும் சண்டை-சச்சரவுகளை எதிர்கொள்ளவும், மேலும் இதுபோன்ற அனைத்துத் தவறான செயல்களைத் தடுக்கவும் வெளிப்படையான சட்ட வகைமுறைகள் சட்டத்தில் இல்லையென்பதால், அரசியல் கட்சிகளை இணைத்துக்கொண்டு, ஆணையம் இந்தத் தேர்தல் நடத்தை விதிகளை தயாரித்துள்ளது. இந்த மாதிரித் தேர்தல் நடத்தை விதிகள் கையேடு, அனைத்துத் தேர்தல் குற்றச்செயல்கள் மற்றும் தவறுகள் குறித்த செய்திகளை உடனடியாகத் தருகின்ற தயார்நிலைப் பார்வைக் கையேடாகப் பயன்படும். மாநிலத் தேர்தல் ஆணையம் தன்னுடைய செயலாக்க அதிகாரத்தின்கீழ் இந்த, மாதிரித் தேர்தல் நடத்தை விதிகளை வெளியிடுகிறது. நாட்டின் உச்சநீதிமன்றம், தன்னுடைய பல அறிவிப்புகளில், மாதிரித் தேர்தல் நடத்தை விதிமுறைகளின் வகைமுறைகளின்படி, நடவடிக்கை எடுத்து விடுதலையான மற்றும் நேர்மையான தேர்தல்களை நடத்துவதை உறுதிசெய்ய மாநிலத் தேர்தல் ஆணையம் தன்னை முழுமையாகத் அர்ப்பணித்துள்ளது என்று ஆணையத்தின் செயல்பாடுகளை அங்கீகரித்துள்ளது.

இந்த விதிமுறைக் கையேடு, தேர்தல் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் ஒரு பயனுள்ள வழிகாட்டியாக விளங்குவதுடன், பொதுவாக இதனைப் படிக்கும் அனைவருக்கும் மற்றும் தேர்தல் செயல் இயக்கத்தவர்க்கும் பயன்படும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

**ராய் பி தாமஸ்**

# புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப்பரப்பில் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல்க்கான நடத்தை விதிமுறைகள்

புதுச்சேரியில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான சுமுகமான மற்றும் அமைதியான தேர்தல் பயனுள்ள மற்றும் அதேசமயம் சுதந்திரமான, நியாயமான, நலன் கருதி அது அவசியமானது மற்றும் பயனுள்ளதாக அமைய அரசியல் கட்சிகளின் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்காக "மாதிரி நடத்தை விதிமுறைகள்" கையேடு வெளியிடப்படுகிறது.

உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களுக்கான மாதிரி நடத்தை விதித் தொகுப்பு இந்திய அரசியல் அமைப்பு சட்டப்பிரிவு 243-ZA உடன் பிரிவு 243-K படிக்க வேண்டும், இதன் கீழான தொடர்புடைய சட்டப்பிரிவுகள், அதன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகள் மற்றும் இது தொடர்பாக ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தி புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையம் கீழ்க்கண்ட விதித் தொகுப்பை ஏற்புக்காகவும், பின்பற்றுவதற்காகவும் வெளியிடுகின்றது.

1. இவ்விதிமுறைகளானது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்காக பின்பற்றுவதற்குரிய மாதிரி நடத்தை விதி தொகுப்பு என அழைக்கப்படும்..

2. எந்த ஒரு நகராட்சி மன்றத்திற்கோ அல்லது கிராமப் பஞ்சாயத்திற்கோ சாதாரண தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுகிறது என்றாலும், இந்த நடத்தை விதிமுறைகள் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் முழுமைக்கும் பொருந்தும்.

3. புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு முழுமைக்கும் நடத்தப்படும் வழக்கமான சாதாரண தேர்தல்கள் தவிர, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இடங்களுக்குத் தற்செயலாக அல்லது சாதாரணமாக காலியிடங்களுக்குத் தேர்தல் அறிவிக்கப்படும் போது உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள, பொருந்தக்கூடிய பகுதி அல்லது மாதிரி நடத்தை விதிமுறைகள் செயல்விளைவுக்கும் வரும் பகுதிகள் பின்வருமாறு:

அ. நகராட்சித் தேர்தல்கள்

| | |
|---|---|
| நகராட்சிகளின் தலைவர் | அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும் |
| நகரமன்றங்களின் உறுப்பினர் | அனைத்து நகரமன்றப் பகுதிகளுக்கும் பொருந்தும் |

ஆ. பஞ்சாயத்து தேர்தல்கள்

| | |
|---|---|
| கொம்யூன் பஞ்சாயத்து மன்றங்களின் உறுப்பினர் | அனைத்து கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கும் பொருந்தும். |
| கொம்யூன் பஞ்சாயத்து தலைவர் | கிராமம் முழுமைக்கும் பொருந்தும் |
| கொம்யூன் பஞ்சாயத்து மன்ற (வார்டு) உறுப்பினர் | கிராமத்திலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தும் |

4. இந்த விதித் தொகுப்பானது, மாநிலத் தேர்தல் ஆணையம் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து செயல்விளைவுக்கு வரும். மேலும் அவ்வப்போது அறிவிக்கப்படுவதும், தேர்தல் நடைமுறைகள் முடியும் வரை செயல்விளைவில் இருக்கும்.

5. இந்த விதித் தொகுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களும் சொற்றொடர்களும், தொடர்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிற சட்டப்பூர்வ ஆணைகளில் தரப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டதாக இருக்கும்.

I. பொது நடத்தை :

6. எந்த அரசியல் கட்சியும் அல்லது வேட்பாளரும் வெவ்வேறு சாதிகள் மற்றும் சமூகத்தினர், மதத்தினர் அல்லது பல்வேறு மொழி பேசும் இனத்தினரிடையே நிலவும் வேறுபாடுகளை அதிகப்படுத்தும் வகையிலோ அல்லது ஒருவொருக்கொருவர் வெறுப்புணர்வை உருவாக்கும் வகையிலோ அல்லது கொந்தளிப்பை ஏற்படுத்தும் வகையிலோ எந்த ஒரு செயலிலும் ஈடுபடக்கூடாது

7. வாக்குகளைப் பெறுவதற்கெனச் சாதி, அல்லது சமூக உணர்வுகளைத் தூண்டும் வகையில் நேரடியாகவோ (அ) மறைமுகமாகவோ எந்த வேண்டுகோளையும் விடுக்கக் கூடாது

8. கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் அல்லது பிற வழிபாட்டுத் தலங்களைத் தேர்தல் பரப்புரைக்கான இடங்களாக பயன்படுத்தக்கூடாது.

9. பிற அரசியல் கட்சிகளை விமர்சனம் செய்யும்போது அவர்களுடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் அவர்களின் கடந்தகால பணி மற்றும் செயல்பாடு குறித்தே இருக்க வேண்டும். கட்சிகளோ அல்லது

வேட்பாளர்களோ அரசியல் கட்சித் தலைவர்கள் அல்லது கட்சித் தொண்டர்களது பொது வாழ்க்கை செயல்பாடுகளுக்கு தொடர்பில்லாத தனிப்பட்ட வாழ்க்கையின் தன்மைகள் குறித்து விமர்சிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

10. எந்தச் சந்தர்ப்பத்திலும் தனிநபர்களது கருத்துக்கள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்க்கும் விதமாக அவர்களது வீடுகளுக்கு முன்பு ஆர்ப்பாட்டங்கள் அல்லது மறியல்களை நடத்தும் செயல்களில் ஈடுபடக் கூடாது,

11. எந்தச் சட்டத்தாலும் அல்லது தொடர்புடைய ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய சட்டங்களாலும் ஊழல் நடவடிக்கைகளாக மற்றும் குற்றங்களாக சொல்லப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் வகையில் அனைத்து அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் கண்டிப்பாக நடக்கக்கூடாது. அதுபோன்ற சில ஊழல் நடவடிக்கைகளாவன:

i. வாக்காளருக்கு எவ்வகையிலும் இலஞ்சமோ அல்லது வெகுமதியோ கொடுத்தல் ;
ii. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, வாக்காளர் அல்லது அவரது ஆதரவாளரை வற்புறுத்துதல், அச்சுறுத்துதல் அல்லது தேவையற்ற செல்வாக்கை அவரிடம் பயன்படுத்துதல், வாக்குரிமையில் தலையிடுதல்
iii. மதம், சாதி மற்றும் இன அடிப்படையில் வாக்களிக்கவோ அல்லது வாக்களிக்காமல் இருக்கவோ வேண்டுகோள் விடுத்தல், வாக்குகளைப் பெறுவதற்கு மதச் சின்னத்தை பயன்படுத்துதல் மற்றும் தனிநபரது தேர்தல் பயன்பாட்டிற்காகத் தேசியக்கொடி அல்லது தேசிய முத்திரை போன்ற தேசிய சின்னங்களை பயன்படுத்துதல்;
iv. ஒரு வேட்பாளரின் வெற்றி வாய்ப்புகளை பாதிக்கும் நோக்கில் அவரது தனிப்பட்ட நடத்தை மற்றும் பண்பைப் பற்றி உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான செய்தியை அல்லது கூற்றினை வெளியிடுதல் ;
v. வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்கு சென்றுவர போக்குவரத்து வசதிகள் அல்லது போக்குவரத்து சாதனங்களை ஏற்பாடு செய்தல்;
vi. போதையூட்டும் மதுபானங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் வழங்கப்படும் கூட்டத்தை ஏற்பாடு செய்தல் மற்றும் நடத்துதல் ;

vii. அச்சடிப்பவர் மற்றும் வெளியீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடாமல் சுவரொட்டி, கைப்பிரதி, துண்டு பிரசுரம், சுற்றறிக்கை அல்லது விளம்பரத்தை அச்சடித்தல் அல்லது வெளியிடுதல்;

viii. தேர்தல் நாள் மற்றும் வாக்குப்பதிவு முடிவுற நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திலிருந்து முந்தைய 48 மணி நேரத்தில் பொது கூட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் நடத்துதல்;

ix. வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவுக்குள் ஆதரவு கோருதல் அல்லது வாக்களிக்க வேண்டுதல் ;

x. வாக்குச் சாவடிக்குள் அல்லது வாக்குச்சாவடிக்கு அருகில் ஒருவர் அத்துமீறி நடத்தல் அல்லது தேர்தல் பணியில் இருக்கும் அலுவலரை அவரது பணியைச் செய்யவிடாமல் தடுத்தல் ;

xi. ஒரு வாக்காளர் பெயரில் ஆள்மாறாட்டம் செய்தல் அல்லது மற்றொரு வாக்காளரின் பெயரை பொய்யாக பயன்படுத்தி வாக்களிக்க முனைதல் ;

12. எந்த ஓர் அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ எந்த ஒரு தனிநபருடைய இடத்தையோ அல்லது பொது இடத்தையோ தொடர்புடைய உரிமையாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி கொடிக் கம்பங்கள் கட்டவும், பதாகைகள் வைக்கவும், அறிவிப்புகள் ஒட்டவும், வாசகங்கள் எழுதவும் பயன்படுத்த அக்கட்சியின் / வேட்பாளரின் தொண்டர்களை அனுமதிக்கக் கூடாது, மேலும், எழுத்துபூர்வ அனுமதி பெறப்பட்டவுடன் அதன் ஒரு நகலை மாவட்ட தேர்தல் அதிகாரிக்கும் மாநகராட்சியாக இருப்பின் அதன் தேர்தல் நடத்தும் அலுவலருக்கும் உரிய ஒப்புகையுடன் உடனடியாக அனுப்ப வேண்டும்.

13. மற்றொரு வேட்பாளரால் / மற்றொரு அரசியல் கட்சியால் ஏற்றப்பட்டுள்ள கொடியையோ அல்லது ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளையோ எந்த ஒரு வேட்பாளர் / அவரது தொண்டர்கள் அகற்றவோ அல்லது சிதைக்கவோ கூடாது.

14. பிற கட்சிகள் ஏற்பாடு செய்கின்ற கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களில் தமது ஆதரவாளர்கள் இடையூறு விளைவிக்காமலும் தடைகள் ஏற்படுத்தாமலும் இருப்பதை அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் உறுதி செய்யவேண்டும். ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்த தொண்டர்கள் அல்லது ஆதரவாளர்கள் மற்றொரு கட்சியால் ஏற்பாடு செய்யப்படும் பொதுக் கூட்டங்களில் வாய்மொழியாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ வினாக்கள் விடுப்பது அல்லது தமது கட்சியின் துண்டு பிரசுரங்களை விநியோகிப்பதன் மூலம் குழப்பங்களை விளைவிப்பது கூடாது, ஒரு கட்சி, பிற கட்சியின் கூட்டங்கள் நடைபெறும் இடங்களின் வழியே ஊர்வலங்களை நடத்தக் கூடாது.

ஒரு கட்சியால் வெளியிடப்படுகின்ற சுவரொட்டிகளை மற்றொரு கட்சியின் தொண்டர்கள் அகற்றக் கூடாது.

15. எந்த கட்சியோ அல்லது வேட்பாளரோ தகுதியுள்ள அலுவலரிடமிருந்து உரிய அனுமதி பெறாமல் ஒலிபெருக்கிகளை பயன்படுத்துதல் கூடாது. நேரடியாக அல்லது பதிவு செய்யப்பட்ட உரைகளைத் தவிர ஏனையவற்றை ஒலிபரப்புவதற்கு ஒலிபெருக்கியை பயன்படுத்தக்கூடாது. இசை மற்றும் பாடல்களை ஒலிபரப்புவதற்கு ஒலிபெருக்கியை பயன்படுத்துதல் கூடாது. வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகள் உட்பட எல்லா ஒலிபெருக்கிகளையும் தேர்தல் பிரச்சாரத்திற்காக காலை 6.00 மணியில் இருந்து இரவு 10.00 மணி வரை மட்டுமே பயன்படுத்தலாம். இந்த விதிகளை மீறுவோர்களிடமிருந்து சாதனங்களை பறிமுதல் செய்ய காவல் துறையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

16. தேர்தலில் போட்டியிடும் எந்த ஒரு வேட்பாளரும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மேலாக தேர்தல் செலவினங்களை மேற்கொள்ளக் கூடாது.

17. போட்டியிடும் வேட்பாளரது வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்படும் தினத்தன்று அவருக்கு இலவசமாக வழங்கப்படும் படிவத்தில் அவர் அன்றாட தேர்தல் செலவுக்கான கணக்குகளைப் பராமரிக்க வேண்டும்.

18. ஒவ்வொரு போட்டியிடும் வேட்பாளரும் (போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் உட்பட) தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் தேர்தல் செலவினங்களுக்கான கணக்கினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அதன் நகலை மாவட்ட தேர்தல் அலுவலரிடமும் மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில் தேர்தல் நடத்தும் அலுவலரிடமும் சமர்ப்பிக்க வேண்டும்;

19. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் வரை அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் அல்லது அரசு மானியம் பெறும் இதர நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் எவ்வகையிலானும் எந்த ஒரு அமைச்சருக்கோ அல்லது பாராளுமன்ற ! சட்டமன்ற உறுப்பினருக்கோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிக்கோ அல்லது வேட்பாளருக்கோ அல்லது அவரைச் சார்ந்த வேறு நபருக்கோ தேர்தலுக்காக வாக்கு சேகரிக்கும் பொருட்டு வழங்கப்படக் கூடாது,

## II. கூட்டங்கள்

20. அமைதி மற்றும் ஒழுங்கை நிலைநாட்டவும், போக்குவரத்தை கட்டுப்படுத்தவும் காவல்துறையினருக்கு உதவும் வகையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டத்திற்கான இடம் மற்றும் நேரம் குறித்து உள்ளூர் காவல்துறை அல்லது பிற தொடர்புடைய அலுவலர்களுக்கு உரிய காலத்திற்கு முன்னதாகவே அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் தெரியப்படுத்த வேண்டும்.

21. கூட்டம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் ஏதேனும் கட்டுப்பாடுகள் அல்லது தடை உத்தரவுகள் செயலிலுள்ளனவா என்பது பற்றி முன்னதாகவே அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் விசாரித்தறிய வேண்டும் அத்தகைய ஆணைகள் செயலிலிருந்தால் அவற்றை அவர்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாணைகளிலிருந்து விலக்கு எதுவும் தேவைப்பட்டால், அதற்கென குறிப்பாக விண்ணப்பித்து உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

22. நடைபெறவுள்ள கூட்டத்திற்காக ஒலிபெருக்கிகள் அல்லது வேறு பிற வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான அனுமதி அல்லது உரிமம் பெறப்பட வேண்டியிருந்தால், அரசியல் கட்சி அல்லது வேட்பாளர், தொடர்புடைய அலுவலருக்கு முன் கூட்டியே விண்ணப்பம் செய்து கொண்டு அத்தகைய அனுமதி அல்லது உரிமத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

23. ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், கூட்டத்தில் தொல்லை கொடுக்கிற நபர்களை அல்லது வேறு வகையில் குழப்பம் விளைவிக்க முயற்சிப்பவர்களை சமாளிக்க எப்போதும் பணியிலுள்ள காவல் துறையினரின் உதவியையே நாடுதல் வேண்டும், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் தாங்களே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது.

24. ஒரு பொது இடத்தில் தேர்தல் கூட்டம் நடத்த அனுமதி வழங்குகையில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடையே பாரபட்சம் காட்டுதல் கூடாது. ஒரே இடத்தில், ஒரே நாளில், ஒரே நேரத்தில் கூட்டம் நடத்த ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளரோ அரசியல் கட்சியோ அனுமதி கோரும் பொழுது முதலில் விண்ணப்பித்த கட்சி அல்லது வேட்பாளருக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும். காவல் துறையினரால் ஒதுக்கப்பட்ட இடங்களில்தான் அவர்கள் கூட்டங்களை நடத்த வேண்டும்.

25. சாதாரணமாக, தேர்தல் காலங்களில் நடத்தப்படும் அனைத்து கூட்டங்களும் தேர்தல் கூட்டங்களாகவே கருதப்படும். அவற்றிற்காக அரசு பணம் எதுவும் செலவிடப்படுதல் கூடாது, சட்டம் ஒழுங்கை பராமரிப்பவர்களும் பாதுகாப்பு பணிகளில் அமர்த்தப்பட்டவர்களும் தவிர ஏனைய அரசு ஊழியர் எவரும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது.

26. எந்த ஒரு கட்சியின் வேட்பாளரும் உரிய உள்ளூர் அலுவலர்களின் அனுமதியின்றி பொதுக் கூட்டங்களையோ அல்லது ஊர்வலங்களையோ நடத்துதல் கூடாது.

III. ஊர்வலங்கள்

27. ஊர்வலம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்கிற ஒரு கட்சி அல்லது வேட்பாளர் ஊர்வலம் தொடங்கவிருக்கும் நேரம், இடம், ஊர்வலம் செல்லவிருக்கிற வழித்தடம், ஊர்வலம் முடிவடைகின்ற இடம் மற்றும் நேரம் ஆகியவை குறித்து முடிவு செய்து கொண்டு அதற்கான அனுமதியை உரிய அலுவலர்களிடம் முன்னதாகவே பெற வேண்டும். பொதுவாக, இவ்வாறு முடிவு செய்யப்பட்ட திட்டத்தில் மாற்றம் ஏதும் இருக்கக் கூடாது.

28. உள்ளூர் காவல் துறையினர் உரிய ஏற்பாடுகளை செய்வதற்கு ஏதுவாக ஊர்வலத்தை ஏற்பாடு செய்பவர்கள் ஊர்வல திட்டம் குறித்து அவர்களுக்கு முன்னதாகவே தகவல் தெரிவிக்க வேண்டும்

29. ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், ஊர்வலம் செல்கிற வழிகளில் கட்டுப்பாட்டு ஆணைகள் ஏதும் நடைமுறையில் உள்ளதா என்பதை அறிந்து, அக்கட்டுப்பாட்டு ஆணைகள் உரிய அலுவலர்களால் விலக்களிக்கப்பட்டிருந்தாலொழிய, அவற்றிற்கு உட்பட்டு நடந்து கொள்ள வேண்டும். நடைமுறையிலுள்ள போக்குவரத்து விதிமுறைகள் அல்லது கட்டுப்பாடுகளை கவனமாக கடைபிடிக்க வேண்டும்

30. ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், போக்குவரத்திற்கு தடை அல்லது இடையூறு ஏற்படாதவாறு ஊர்வலம் இலகுவாக கடந்து செல்லும் வகையில் ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொள்ள வேண்டும். ஊர்வலம் மிகவும் நீண்டதாக இருந்தால் ஊர்வலத்தை ஏற்புடைய அளவிலான நீளம் கொண்ட பகுதிகளாக பிரித்து நடத்திச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், ஊர்வலம் கடந்து செல்ல வேண்டிய இடங்களில் உள்ள சாலை சந்திப்புகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போக்குவரத்தை பகுதி பகுதியாக அனுமதிப்பதன் மூலம் போக்குவரத்தை முற்றிலுமாக நிறுத்தி வைப்பதையும், போக்குவரத்து நெரிசலையும் தவிர்க்கலாம்.

31. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள், ஒரே வழித்தடத்தில் அல்லது அதை ஒட்டியுள்ள பகுதிகளில் ஒரே சமயத்தில் ஊர்வலங்கள் நடத்த விரும்பினால், ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் முன்னதாகவே தொடர்பு கொண்டு ஊர்வலங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாதவாறும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாதவாறும்

இருப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து முடிவு செய்ய வேண்டும். திருப்திகரமான வகையில் ஏற்பாடுகளைச் செய்து கொள்ள உள்ளூர் காவல் துறையினரின் உதவியை பெற்றுக் கொள்ளலாம். இதற்கென, அரசியல் கட்சிகள் முடிந்த வரை முன்னதாகவே காவல் துறையினரை தொடர்பு கொள்ள வேண்டும்,

32. அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் ஊர்வலங்களில் தாங்கள் எடுத்துச் செல்லும் பொருட்களில், குறிப்பாக, உணர்ச்சி வசப்பட்ட நிலையில் சமூக விரோதிகளால் தவறாக பயன்படுத்தக்கூடிய பொருட்களில் அதிகபட்ச கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கடைபிடிக்க வேண்டும்.

33. பிற அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களையோ அல்லது அவற்றின் தலைவர்களையோ குறிக்கும் உருவ பொம்மைகளை எடுத்துச் செல்வது, பொது இடத்தில் அவற்றை எரிப்பது மற்றும் இதுபோன்ற பிற வகையிலான ஆர்ப்பாட்டங்களை எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ ஊக்குவிக்கக் கூடாது,

## IV. வாக்குப் பதிவு நாள்

34. அமைதியான மற்றும் ஒழுங்கான முறையில் வாக்குப் பதிவு நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு வேட்பாளரும் மற்றும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தேர்தல் பணியில் உள்ள அலுவலர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். இது தொடர்பான சில கோட்பாடுகள் கீழே கூறப்பட்டுள்ளன:-

i. வாக்குப் பதிவு நாளன்றும், அதற்கு முந்தைய இருபத்து நான்கு மணி நேரத்திலும் போதையூட்டும் மது அல்லது தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை வழங்குவதோ அல்லது விநியோகிப்பதோ கூடாது,

ii. வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் எந்த வேட்பாளரது முகாமும் அமைக்கப்படக் கூடாது. ஒரே வளாகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகள் இருக்கும் இடத்திலும் ஒரு வேட்பாளருக்கு அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் பொதுவாக ஒரே ஒரு முகாம் மட்டுமே வளாகத்திலிருந்து 200 மீட்டர் தூரத்துக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்கலாம்.

iii. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களது தொண்டர்கள், அனுதாபிகளிடையே ஏற்படும் மோதலையும், பதட்ட நிலையையும் தவிர்க்கும் வகையில், அரசியல் கட்சிகளால்/

வேட்பாளர்களால் வாக்குச் சாவடிகளுக்கு அருகில் அமைக்கப்படும் முகாம்களுக்கருகில் தேவையில்லாமல் கூட்டம் கூடுவதைத் தவிர்க்க வேண்டும்.

iv. வேட்பாளருடைய முகாம்கள் அதிக அளவிலான சுவரொட்டிகள், கொடிகள், சின்னங்கள்

v. அல்லது வேறு பிற பிரச்சாரப் பொருட்கள் இல்லாமல் எளிமையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அம்முகாம்களில் தின்பண்டங்களை விநியோகிக்கவோ அல்லது மக்கள் கூடுவதை அனுமதிக்கவோ கூடாது,

vi. வாக்காளர்களுக்கு வழங்கப்படும் அடையாளச் சீட்டுகள் வெற்று (வெள்ளை) தாள்களிலேயே இருக்க வேண்டும். அவற்றில் சின்னமோ அல்லது வேட்பாளரின் பெயரோ இருக்கக் கூடாது. வாக்காளரின் பெயர் அவரது தகப்பனார்/கணவரின் பெயர், வார்டு எண், வாக்குச்சாவடியின் எண், வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளரின் வரிசை எண் ஆகியவை மட்டுமே அடையாள சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

vii. வாக்குப் பதிவு நாளன்று வாகனங்கள் இயக்கப்படுவது குறித்த கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதில் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும். வாகனங்களுக்கான அனுமதி சீட்டுகளைப் பெற்று அவற்றை வாகனங்களில் தெளிவாகத் தெரியும்படி ஒட்டி வைக்க வேண்டும்.

## V. வாக்குச்சாவடி

35. வாக்குச் சாவடியிலிருந்து 100 மீட்டர் தொலைவிற்குள் தேர்தல் ஆதரவு கோருவது தேர்தல் சட்டத்தின்கீழான ஒரு குற்றமாகும். இக்குற்றத்தில் ஈடுபடும் எந்தவொரு நபரையும் காவல் துறையினர் பிடியாணைமின்றி கைது செய்து தொடர்புடைய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரலாம்.

36. வாக்காளர்கள் தவிர, எந்தவொரு நபரும் தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து உரிய அனுமதி சீட்டு பெறாமல் வாக்குச் சாவடிக்குள் நுழைதல் கூடாது.

37. எந்த நபரும் (அ) வாக்குச்சாவடிகளின் உள்ளேயோ, அவற்றின் நுழைவு வாயிலிலோ அல்லது அருகில் அமைந்துள்ள பொது அல்லது தனியாரது இடத்திலோ மெகாபோன் (megaphone) அல்லது ஒலிபெருக்கியை பயன்படுத்த அல்லது இயக்கக் கூடாது, (ஆ) தேர்தல் பணியில் உள்ள வாக்குச்சாவடி அலுவலர்களது பணிக்கு இடையூறு செய்யும் வகையில் வாக்குச்சாவடிக்குள்ளோ அல்லது அதன் அருகிலோ ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்ளக் கூடாது.

38. வாக்குச் சாவடி அலுவலரின் சட்ட ரீதியான உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கும் எந்தவொரு நபரும் காவல்துறையால் வாக்குச்சாவடியிலிருந்து அகற்றப்படுவார்.

39. வாக்குச் சாவடியிலிருந்து வாக்குப்பெட்டி / வாக்குச் சீட்டு / மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை எடுத்துச் செல்ல / வஞ்சகமாக கவர்ந்து செல்ல முயற்சிக்கும் எந்த ஒரு நபரும் தண்டிக்கப்படுவார்.

VI. அரசு பணியை தவறாகப் பயன்படுத்துதல்

40. அரசு ஊழியர் தேர்தல்களின்போது முற்றிலும் பாரபட்சமின்றி செயல்பட வேண்டும். போட்டியிடும் எந்த ஒரு வேட்பாளருக்கோ அல்லது எந்த ஒரு அரசியல் கட்சிக்கோ ஆதரவாக அவர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுதல் கூடாது. எந்த ஒரு அரசு ஊழியராவது போட்டியிடும் ஏதாவதொரு வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சார நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரிந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அது குறித்து தேர்தல் நடத்தும் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம்.

41. தேர்தல் பிரச்சார பயணத்தின் போது தனி நபர் ஒருவரது வீட்டில் நடத்தப்படும் நிகழ்ச்சிக்குரிய அழைப்பை ஏற்றுக் கொண்டு அமைச்சர் ஒருவர் கலந்து கொள்ளும்போது, அவ்வமைச்சருடன் ஓர் அரசு ஊழியர் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதோ அல்லது உடன் செல்வதோ கூடாது.

VII. மாநிலத்தில் மற்றும் மத்தியில் ஆட்சியிலுள்ள கட்சி

42. மத்தியிலோ அல்லது மாநிலத்திலோ ஆட்சிப் பொறுப்பிலுள்ள கட்சியானது தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக தனது அரசு பதவியை பயன்படுத்தியுள்ளது என்னும் புகார் எழுவதற்கு இடமளிக்கப்படாததை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக

i. (அ) அமைச்சர்கள் தமது அலுவல் பயணத்தை தேர்தல் பணியோடு இணைத்துக் கொள்ளக்கூடாது. மேலும், தேர்தல் பணிக்காக அரசு அமைப்புகளையோ அல்லது அரசு பணியாளர்களையோ பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

ஆ) அமைச்சர் ஒருவர் தேர்தல்கள் நடக்கும் ஒரு மாவட்ட பகுதியில் பயணம் மேற்கொள்வாராயின் அப்பயணம் தேர்தல் நிமித்த பயணமாகவே கருதப்படும். பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளவர்களைத் தவிர பிற அரசு பணியாளர்கள் எவரும் அமைச்சருடன் செல்லுதல் கூடாது இத்தகைய

பயணத்தில் அரசு வாகனங்களோ அல்லது பிற அரசு சலுகைகளோ அளிக்கப்படக் கூடாது.

(இ) அரசு வானூர்திகள், வாகனங்கள், பிற அரசு அமைப்புகள் மற்றும் பணியாளர்கள் ஆளும் கட்சியின் நலனுக்காக பயன்படுத்தப்படக் கூடாது

ii. மைதானங்கள் முதலிய பொது இடங்களை தேர்தல் கூட்டம் நடத்துவதற்காகவும் மற்றும் தேர்தல்களுக்காக பயன்படுத்தப்படும் வானூர்திகளை நிறுத்துவதற்காகவும் ஆளும் கட்சி, ஏகபோக உரிமையுடன் எடுத்துக் கொள்ளக்கூடாது. அவ்விடங்கள் மற்றும் வசதிகள் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் ஆளுங்கட்சியால் எந்த பயன்படுத்தப்படுகிறதோ அதே முறையில் பயன்படுத்த பிற கட்சிகளும் வேட்பாளர்களும் அனுமதிக்கப்பட வேண்டும்.

iii. ஓய்வு இல்லங்கள், பயணியர் மாளிகைகள் அல்லது ஏனைய அரசு குடியிருப்புகளை ஆட்சியிலிருக்கும் கட்சி அல்லது அக்கட்சியின் வேட்பாளர் மட்டுமே பயன்படுத்தக் கூடாது. அவற்றை ஏனைய கட்சியினரும் வேட்பாளர்களும் நியாயமான முறையில் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். ஆனால் கட்சி அல்லது வேட்பாளர் எவரும் அத்தங்குமிடங்களை (அதனை ஒட்டியுள்ள வளாகம் உட்பட) தேர்தல் அலுவலகமாகவும் தேர்தல் பிரச்சாரத்திற்கான பொதுக் கூட்டம் நடத்துமிடமாகவும் பயன்படுத்தக் கூடாது

iv. தேர்தல் நேரத்தில் செய்தித் தாள்களிலும், இதர ஊடகங்களிலும் அரசு செலவில் விளம்பரங்களை வெளியிடுவதையும் ஆளுங்கட்சியின் செல்வாக்கினை மேம்படுத்தும் நோக்கில் அரசியல் செய்திகளை வெளியிடுவதற்கும் விளம்பரப்படுத்துவதற்கும் அரசு மக்கள் தொடர்பு அமைப்புகளை தவறாக பயன்படுத்துவதையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

v. புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவிக்கப்படும் நாள் முதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை அமைச்சர்களும் பிற அதிகாரிகளும் கீழ்கண்டவற்றை தவிர்க்க வேண்டும் -

(அ) விருப்ப நிதிகளிலிருந்து மானியங்கள் / தொகைகள் வழங்குதல்.

(ஆ) புதிய திட்டம் அறிவித்தல்

(இ) எந்த வகையிலானும் நிதி உதவிகளை அறிவித்தல் அல்லது வழங்குதல், அது தொடர்பான வாக்குறுதிகள் அளித்தல் ; அல்லது

(ஈ) எத்தகைய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுதல் மற்றும் அது தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபடுதல், அல்லது

(உ) சாலைகள் அமைப்பது, குடிநீர் வசதிகள் செய்து தருவது போன்றவை குறித்து வாக்குறுதி அளித்தல் ; அல்லது

(ஊ) ஆளுங்கட்சிக்கு சாதகமாக வாக்காளர்களிடம் செல்வாக்கு ஏற்படுத்தும் வகையில், அரசு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றில் தற்காலிக நியமனம் செய்தல்

vi. மத்திய அல்லது மாநில அமைச்சர்கள், ஒரு வேட்பாளர் அல்லது வாக்காளர் அல்லது அனுமதி பெற்ற தேர்தல் முகவர் என்ற நிலையில் அல்லாது வாக்குச்சாவடிக்குள் அல்லது வாக்குச்சீட்டு எண்ணுமிடத்திற்குள் நுழையக்கூடாது.

## VIII. ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல்

43. உலக அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் நீங்கலாக (Global Tenders) இதர ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தலுக்கு முன்னதாக ஏற்கனவே கோரப்பட்டிருந்தால் அவை மதிப்பீடு செய்யப்படலாமே தவிர, புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியின்றி இறுதி செய்யப்படக் கூடாது, ஏற்கனவே கோரப்படாமல் இருக்கும் நிலையில், புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியின்றி ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரக் கூடாது.:

## IX. திட்டங்கள் மற்றும் பணிகள்

44. மாதிரி நடத்தை விதிகள் நடைமுறையில் இருக்கும்பொழுது :-

(i) பதவியில் இருக்கும் ஆளும் கட்சிக்கு சாதகமாக வாக்காளர்களை கவரும் நோக்கத்தில், எவ்வித புதிய திட்டங்கள், நிகழ்ச்சிகள் அல்லது சலுகைகள் அல்லது எவ்வகையான மானியங்களை அறிவிக்கவோ அல்லது அது தொடர்பான வாக்குறுதிகளை வழங்குவதோ அல்லது அடிக்கல்கள் நாட்டுவதோ அல்லது இது போன்றவற்றை செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது.

(ii) மேற்படி கட்டுப்பாடுகள் புதிய திட்டங்களுக்கும் நடைமுறையிலுள்ள திட்டங்களுக்கும் பொருந்தும். ஆனால், அவற்றின் பொதுநலன் கருதி ஏற்கனவே முடிவு பெறும் தருவாயில் உள்ள திட்டங்களை, நிறுத்தவோ அல்லது தாமதப்படுத்தவோ தேவையில்லை.

(iii) தேர்தல் நடைபெறும் எப்பகுதியிலும் நலத் திட்டங்கள் மற்றும் பணிகளுக்காக புதிதாக நிதி விடுவிக்கப்படுவதும் பணி ஒப்பந்தங்கள் வழங்குவதும் கூடாது. ஆயினும், ஏற்கனவே நிறைவு செய்யப்பட்ட பகுதி பணிகளுக்காக வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைபிடித்து, நிதி துறையின் ஒப்புதலுடன் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தடையேதுமில்லை.

(iv) அரசியல் சார்புடைய அரக் நிர்வாகிகள் (அமைச்சர்கள் முதலானோர்) ஆய்வு மேற்கொள்வதையும் பயனளிப்புத் திட்டங்கள் (Beneficiary Oriented Scheme) முன்னதாகவே தொடங்கப்பட்டிருந்தாலும் அவற்றை தொடர்ந்து செயல்படுத்துவதையும் தேர்தல் முடிவடையும் வரை நிறுத்தி வைக்க வேண்டும்.

(v) களத்தில் திட்டப்பணிகள் துவக்கப்படாதிருந்தால், ஏற்கனவே பணியாணைகள் வழங்கப்பட்டிருந்தாலும், அப்பணியை ஆரம்பிக்கக் கூடாது. தேர்தல் நடைமுறை முடிவு பெற்ற பின்னரே இத்திட்டப்பணிகள் தொடங்கப்பட வேண்டும்.

(vi) உரிய அனுமதிகளைப் பெற்று களத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்ட திட்டப்பணிகளைத் தொடரலாம்.

(vii) மாதிரி நடத்தை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே பெயர்களுடன் பயனாளிகள் கண்டறியப்பட்ட பயனளிப்புத் திட்டங்களைத் (Beneficiary Projects) தொடரலாம்.

X. பதவிக் காலத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள்

45. மாதிரி நடத்தை விதி தொகுப்பு நடைமுறையில் இருக்கும்போது,

(i) பதவியில் இருக்கும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தங்கள் பதவியின் அதிகாரத்தை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்துகிறார்கள் என்ற புகாருக்கு இடம் அளிக்கப்படாததை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
(ii) தலைவர் உறுப்பினர் அல்லது கட்சி செயல்பாடுகளுக்கான உறுப்பினர் உட்பட்ட எந்த அரசியல் பிரமுகர்களாலும் உள்ளாட்சி

கட்டிடங்கள் / அறைகள் / அலுவலகங்கள் எவையும் அரசியல் நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படக் கூடாது.

(iii) வறட்சி / வெள்ள நிவாரண நடவடிக்கைகள் அல்லது இதுபோன்ற மீட்பு
நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கும் கூட்டங்கள் தவிர, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளின் மன்றக் கூட்டங்களை நடத்தக் கூடாது.

(iv) சாதாரணத் தேர்தலின் போது, உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் அலுவலக ஊர்தியானது தொடர்புடைய மாவட்ட அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தற்செயல் தேர்தல்களின் போது, மாதிரி நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள பகுதிகளில் உள்ளாட்சி பிரதிநிதிகள் தங்களது அலுவலக ஊர்திகளை பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளது.

XI. தேர்தல் பார்வையாளர்கள்

46. புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படும் தேர்தல் பார்வையாளர்களிடம் வேட்பாளர் அல்லது அவர்களது முகவர்கள் தேர்தல் நடத்துவது தொடர்பாக குறிப்பிட்ட புகாரை அளிக்கலாம் அல்லது பிரச்சினைகள் எதுவுமிருந்தால் தெரிவிக்கலாம்.

XII. விதி மீறலுக்கான தண்டனை :

47. இந்த நடத்தை விதிகளை மீறுவது நடைமுறையிலுள்ள பல்வேறு சட்டங்களின் கீழ் தண்டனைக்குரியதாகும்.

48. இந்த நடத்தை விதிகளை மீறுவோர் மீது உரிய குற்றவியல் நீதிமன்றத்தில் தொடர்புடைய சட்டப் பிரிவுகளின்கீழ் புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்திடம் தகவல் தெரிவித்து வழக்கு தொடுக்க மாநில தேர்தல் அலுவலர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் காவல் துறையினருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகளை (MCC) கடுமையான அமலாக்கத்திற்கான முக்கிய வழிகாட்டுதல்கள், பின்னிணைப்பில் உள்ளவாறு காவல்துறை, அமைச்சர்கள், செயலாளர்கள்/துறைகளின் தலைவர், மாவட்டத்தின் நடத்தும் தேர்தல் அதிகாரிகள் / தேர்தல் அதிகாரிகள் / வேட்பாளர்கள் மீண்டும் வலியுறுத்தப்படுகிறார்கள்.

XIII. மற்றவை

49. மேலே விவரிக்கப்பட்ட ஏதேனும் விதிகள் பற்றாக்குறையாகக் இருந்தால், எந்தவொரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும், மாதிரி நடத்தை நெறிமுறையின் கையேட்டில் உள்ள விதிகள் முரண்பாடாக இருந்தால், இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட ஆவண எண் 21ஆம் விதிகளுடன் கருத்தில் கொள்ள வேண்டும்.

# இணைப்பு

## புதுச்சேரி உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் மாதிரி நடத்தை விதித் தொகுப்பை கண்டிப்பான முறையில் செயல்படுத்துவதற்கான முக்கிய வழிகாட்டுதல்கள்'

**(காவல்துறையினர், அமைச்சர்கள், செயலாளர்கள் / துறை தலைவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வேட்பாளர்கள் ஆகியோருக்கு)**

**I. பொது நடத்தை**

**(1) எந்த அரசியல் கட்சியும் அல்லது வேட்பாளரும் வெவ்வேறு சாதிகள் மற்றும் சமூகத்தினர், மதத்தினர் அல்லது பல்வேறு மொழி பேசும் இனத்தினரிடையே நிலவும் வேறுபாடுகளை அதிகப்படுத்தும் வகையிலோ அல்லது ஒருவொருக்கொருவர் வெறுப்புணர்வை உருவாக்கும் வகையிலோ அல்லது கொந்தளிப்பை ஏற்படுத்தும் வகையிலோ எந்த ஒரு செயலிலும் ஈடுபடக்கூடாது**

**(2) பிற அரசியல் கட்சிகளை விமர்சனம் செய்யும்போது அவர்களுடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் அவர்களின் கடந்தகால பணி மற்றும் செயல்பாடு குறித்தே அது இருக்க வேண்டும்.**

**அ) கட்சிகளோ அல்லது வேட்பாளர்களோ அரசியல் கட்சி தலைவர்கள் அல்லது கட்சி தொண்டர்களது பொது வாழ்க்கை செயல்பாடுகளுக்கு தொடர்பில்லாத தனிப்பட்ட வாழ்க்கையின் தன்மைகள் குறித்து விமர்சிப்பதைத் தவிர்க்கவேண்டும்,**

**ஆ) பிற கட்சிகள் அல்லது அவற்றின் தொண்டர்கள் குறித்த உறுதி செய்யப்படாத குற்றச்சாட்டுகள் அல்லது திரிக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையிலான விமர்சனம் தவிர்க்கப்பட வேண்டும்.**

**(3) வாக்குகளைப் பெறுவதற்கென சாதி, அல்லது சமூக உணர்வுகளைத் தூண்டும் வகையில் எந்த வேண்டுகோளையும் விடுக்கக் கூடாது.**

- **கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் அல்லது பிற வழிபாட்டுத் தலங்களை தேர்தல் பிரச்சார இடங்களாக பயன்படுத்தக்கூடாது.**

(4) தேர்தல் சட்டத்தால், ஊழல் நடவடிக்கைகளாகவும் குற்றங்களாகவும் சொல்லப்பட்ட கீழ்க்கண்டவை போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

- வாக்காளர்களுக்கு கையூட்டு அளித்தல், வாக்காளர்களை அச்சுறுத்துதல், வாக்காளர் ஆள்மாறாட்டம் செய்தல், வாக்குச் சாவடிகளிலிருந்து 100 மீட்டர்களுக்குள் ஆதரவு திரட்டுதல்.தேர்தல் நாள் மற்றும் வாக்குப்பதிவு முடிவுற நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு முந்தைய 48 மணி நேரத்தில் பொது கூட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் நடத்துதல் மற்றும் வாக்குச்சாவடிக்கு சென்று வர வாக்காளர்களுக்கு வாகனம் மற்றும் போக்குவரத்து வசதியை வழங்குதல்.

(5) ஒவ்வொரு தனிநபரது அமைதியான மற்றும் பாதிக்கப்படாத தனிப்பட்ட வாழ்க்கைக்கான உரிமை மதிக்கப்பட வேண்டும், என்றாலும், அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தங்களது அரசியல் கருத்துகளையும், செயல்பாடுகளையும் கூடுமானவரையில் வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

- எந்த சந்தர்ப்பத்திலும் தனிநபர்களது கருத்துக்கள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்க்கும் விதமாக அவர்களது வீடுகளுக்கு முன்பு ஆர்ப்பாட்டங்கள் அல்லது மறியல்களை நடத்தும் செயல்களில் ஈடுபடக் கூடாது.

(6) எந்த ஒரு அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ அக்கட்சியின் / வேட்பாளரின் தொண்டர்களை எந்த ஒரு தனிநபருடைய இடம், கட்டிடம் சுற்றுசுவர் போன்றவற்றை தொடர்புடைய உரிமையாளரின் அனுமதியின்றி கொடிக் கம்பங்கள் கட்டவும், பதாகைகள் வைக்கவும், அறிவிப்புகள் ஒட்டவும், வாசகங்கள் எழுதவும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

(7) பிற கட்சிகள் ஏற்பாடு செய்கின்ற கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களில் தமது ஆதரவாளர்கள் இடையூறு விளைவிக்காமலும் தடைகள் ஏற்படுத்தாமலும் இருப்பதை அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் உறுதி செய்ய வேண்டும்.

(அ) ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்த தொண்டர்கள் அல்லது ஆதரவாளர்கள் மற்றொரு கட்சியால் ஏற்பாடு செய்யப்படும் பொதுக்கூட்டங்களில் வாய்மொழியாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ வினாக்கள் விடுப்பதோ அல்லது தமது கட்சியின் துண்டு பிரசுரங்களை விநியோகிப்பதன் மூலம் குழப்பங்களை விளைவிப்பதோ கூடாது.

ஆ) ஒரு கட்சி, பிற கட்சியின் கூட்டங்கள் நடைபெறும் இடங்களின் வழியே ஊர்வலங்களை நடத்தக் கூடாது,

இ) ஒரு கட்சியால் வெளியிடப்படுகின்ற சுவரொட்டிகளை மற்றொரு கட்சியின் தொண்டர்கள் அகற்றக் கூடாது.

II. கூட்டங்கள்

(1) போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும் அமைதி மற்றும் ஒழுங்கை நிலைநாட்டவும் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள காவல்துறைக்கு உதவும் வகையில் ஓர் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர், தாம் நடத்த உத்தேசித்துள்ள கூட்டத்திற்கான இடம் மற்றும் நேரம் குறித்து உரிய நேரத்திற்குள்ளாகவே உள்ளூர் காவல்துறையினருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

(2) கூட்டம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் ஏதேனும் கட்டுப்பாடுகள் அல்லது தடை உத்தரவுகள் செயலிலுள்ளனவா என்பது பற்றி முன்னதாகவே அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் விசாரித்தறிய வேண்டும். அத்தகைய ஆணைகள் செயலிலிருந்தால் அவற்றை அவர்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாணைகளிலிருந்து விலக்கு எதுவும் தேவைப்பட்டால், அதற்கென குறிப்பாக விண்ணப்பித்து உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(3) நடைபெறவுள்ள கூட்டத்திற்காக ஒலிபெருக்கிகள் அல்லது வேறு பிற வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான அனுமதி அல்லது உரிமம் பெறப்பட வேண்டியிருந்தால், அரசியல் கட்சி அல்லது வேட்பாளர், தொடர்புடைய அலுவலருக்கு முன் கூட்டியே விண்ணப்பம் செய்து கொண்டு அத்தகைய அனுமதி அல்லது உரிமத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

(4) ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், கூட்டத்தில் தொல்லை கொடுக்கிற நபர்களை அல்லது வேறு வகையில் குழப்பம் விளைவிக்க முயற்சிப்பவர்களை சமாளிக்க எப்போதும் பணியிலுள்ள காவல் துறையினரின் உதவியையே நாடுதல் வேண்டும். தாங்களே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது.

(அ) அனைத்து அரசியல் கட்சிகள் / போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தேர்தல் கூட்டங்கள் நடத்த மைதானங்கள் போன்ற பொது இடங்கள் பாரபட்சமின்றி தரப்படவேண்டும்.

(ஆ) சம வாய்ப்பு வழங்கப்படும் வகையில் சிறிய விமான தரையிறங்கு தளங்களை அனைத்து அரசியல் கட்சிகள் / போட்டியிடும் வேட்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ள பாரபட்சமின்றி அனுமதிக்க வேண்டும்.

(இ) நடைபெறவுள்ள கூட்டங்களுக்கான இடம் மற்றும் நேரம் குறித்து உள்ளூர் காவல் துறையினருக்கு முன்னதாகவே முழுமையாக தெரிவிக்கப்பட்டு அனைத்து தேவையான அனுமதிகளும் பெறப்பட வேண்டும்.

III. ஊர்வலங்கள்-

(1) ஊர்வலம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்கிற ஒரு கட்சி அல்லது வேட்பாளர் ஊர்வலம் தொடங்கவிருக்கும் நேரம், இடம், ஊர்வலம் செல்லவிருக்கிற வழித்தடம், ஊர்வலம் முடிவடைகின்ற இடம் மற்றும் நேரம் ஆகியவை குறித்து முன்னதாகவே முடிவு செய்து கொள்ள வேண்டும். பொதுவாக, இவ்வாறு முடிவு செய்யப்பட்ட திட்டத்தில் மாற்றம் ஏதும் இருக்கக் கூடாது,

(2) ஊர்வலத்தை ஏற்பாடு செய்பவர்கள், உள்ளூர் காவல் துறையினர் உரிய ஏற்பாடுகளைச் செய்ய உதவும் வகையில் ஊர்வல திட்டம் குறித்து அவர்களுக்கு முன்னதாகவே தகவல் தெரிவிக்க வேண்டும்,

(3) கூட்டம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் ஏதேனும் கட்டுப்பாடுகள் அல்லது தடை உத்தரவுகள் செயலிலுள்ளனவா என்பது பற்றி முன்னதாகவே அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் விசாரித்தறிய வேண்டும். அத்தகைய ஆணைகள் செயலிலிருந்தால் உரிய அலுவலரால் விலக்களிக்கப்பட்டிருந்தாலொழிய அவற்றை அவர்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

- மேலும், நடைமுறையிலுள்ள போக்குவரத்து விதிமுறைகள் அல்லது கட்டுப்பாடுகளை கவனமாக கடைப்பிடிக்க வேண்டும்.

(4) ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், போக்குவரத்திற்கு தடை அல்லது இடையூறு ஏற்படாதவாறு ஊர்வலம் தடையின்றி செல்லும் வகையில் ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொள்ள வேண்டும். ஊர்வலம் மிகவும் நீண்டதாக இருந்தால் ஊர்வலத்தை ஏற்புடைய அளவிலான நீளம் கொண்ட பகுதிகளாகப் பிரித்து நடத்திச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம்,

ஊர்வலம் கடந்து செல்ல வேண்டிய இடங்களில் உள்ள சாலை சந்திப்புகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போக்குவரத்தை பகுதி பகுதியாக அனுமதித்து, போக்குவரத்தை முற்றிலுமாக நிறுத்தி வைப்பதையும், போக்குவரத்து நெரிசலையும் தவிர்க்கலாம்.

(5) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள், ஒரே வழித்தடத்தில் அல்லது அதை ஒட்டியுள்ள பகுதிகளில் ஒரே சமயத்தில் ஊர்வலங்கள் நடத்த விரும்பினால், ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் முன்னதாகவே தொடர்பு கொண்டு ஊர்வலங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாதவாறும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாதவாறும் இருக்க செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து முடிவு செய்ய வேண்டும்.

* உரிய திருப்திகரமான வகையில் ஏற்பாடுகளை செய்து கொள்ள உள்ளூர் காவல் துறையினரின் உதவியை பெற்றுக் கொள்ளலாம். இதற்கென, அரசியல் கட்சிகள் முடிந்த வரை முன்னதாகவே காவல் துறையினரை தொடர்பு கொள்ள வேண்டும்.

(6) அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் ஊர்வலங்களில் தாங்கள் எடுத்துச் செல்லும் பொருட்களில், குறிப்பாக, உணர்ச்சி வசப்பட்ட நிலையில் சமூக விரோதிகளால் தவறாக பயன்படுத்தக்கூடிய பொருட்களில் அதிகபட்ச கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கடைபிடிக்க வேண்டும்.

(7) பிற அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களையோ அல்லது அவற்றின் தலைவர்களையோ குறிக்கும் உருவ பொம்மைகளை எடுத்து செல்வது, பொது இடத்தில் அவற்றை எரிப்பது மற்றும் இதுபோன்ற பிற வகையிலான ஆர்ப்பாட்டங்கள் எந்தவொரு அரசியல் கட்சியாலும் அல்லது வேட்பாளராலும் ஊக்குவிக்கப்படக் கூடாது.

அ) ஊர்வலம் ஆரம்பிக்கும் நேரம், இடம், செல்லும் வழித்தடம் மற்றும் ஊர்வலம் முடிவடையும் நேரம், இடம் ஆகியவை முன்கூட்டியே முடிவு செய்யப்பட வேண்டும். மேலும், காவல்துறையினரிடமிருந்து முன் அனுமதிகள் பெறப்பட வேண்டும்.

ஆ) கூட்டம் நடைபெறும் இடத்தில் கட்டுப்பாடுகள் அல்லது தடை உத்தரவுகள் ஏதும் அமலில் இருந்தால் அவை அப்படியே மதிக்கப்பட வேண்டும். விலக்கு ஏதும் தேவையிருப்பின், உரிய நேரத்திற்குள் அதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

(இ) அனைத்து சாலை ஒழுங்கு முறைகளையும் பிற கட்டுப்பாடுகளையும் மதிக்க வேண்டும்,
ஈ) ஊர்வலம் செல்லும் பாதை போக்குவரத்திற்கு தடையாக இருத்தல் கூடாது.

(உ) பொதுவாக, இதுபோன்ற கூட்டங்கள் / ஊர்வலங்கள் இரவு 10.00 மணிக்கு மேல் தொடர அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும், இது தொடர்பாக, உள்ளாட்சி சட்டங்கள், அப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த உள்ளூர் நடைமுறைகள் மற்றும் வானிலை நிலவரங்கள், திருவிழா காலம், தேர்வு நேரம் போன்ற தொடர்புடைய நேர்வுகளும் கருத்தில் கொள்ளப்படும்.

ஊ) கூட்டங்களில் இடையூறு செய்யும் அல்லது பிற வகையிலான அமைதியின்மையை ஏற்படுத்தும் நபர்களைக் கையாளுவதற்கு காவல் துறையின் உதவியை நாடவேண்டும்.

எ) நடைபெறவுள்ள கூட்டங்களுக்காக ஒலிபெருக்கிகள் அல்லது வேறு பிற வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதி பெறப்பட வேண்டும். பொது கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும் தொடர்புடைய அலுவலர்களின் எழுத்துபூர்வ முன் அனுமதியின்றி ஒலிபெருக்கிகளை பயன்படுத்தக்கூடாது.

ஏ) ஓரிடத்தில் நிலையாக வைக்கப்பட்டிருந்தாலும் நகரும் வாகனங்களின் மேல் கட்டப்பட்டிருந்தாலும் அவ்வொலிபெருக்கிகளை காலை 6.00 மணிக்கு முன்பாகவோ, இரவு 10.00 மணிக்கு பின்பாகவோ உரிய அலுவலரிடம் எழுத்துபூர்வமான அனுமதியின்றி பயன்படுத்தக் கூடாது.

(ஐ) பிற கட்சிகள் மற்றும் வேட்பாளர்களது சுவரொட்டிகளை அகற்றவோ அல்லது சேதப்படுத்தவோ கூடாது,

(ஒ)தேர்தல் நடைபெறும் நாளன்று, அடையாள சீட்டுகள் வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் இடத்திலும் வாக்குச்சாவடிகள் அருகிலும் சுவரொட்டிகள், கொடிகள், சின்னங்கள் அல்லது பிற பிரச்சார சாதனங்களை காட்சிபடுத்தக் கூடாது,

IV. வாக்குப் பதிவு நாள்

அனைத்து அரசியல் கட்சிகளும் மற்றும் வேட்பாளர்களும்-

(i) வாக்குப் பதிவு அமைதியான மற்றும் ஒழுங்கான முறையில் நடைபெறுவதையும் வாக்காளர்கள் எவ்வித அச்சுறுத்தலோ அல்லது இடையூறோ இன்றி முழு சுதந்திரத்துடன் தங்கள் வாக்கினை செலுத்துவதையும் உறுதி செய்யும் பணியில் தேர்தல் அலுவலர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

(ii) தங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர்களுக்கு உரிய வில்லைகளோ (Badges) அல்லது அடையாள அட்டைகளோ வழங்க வேண்டும்,

(iii) வாக்காளர்களுக்கு வழங்கப்படும் அடையாளச் சீட்டு வெற்று (வெள்ளை)
தாள்களிலேயே இருக்க வேண்டும்; அவற்றில் சின்னமோ அல்லது வேட்பாளரின் பெயரோ இருக்கக் கூடாது என்பதை ஏற்க வேண்டும்.

(iv) வாக்குப் பதிவு நாளன்றும், அதற்கு முந்தைய 24 மணி நேரத்திலும் மது வழங்குவது அல்லது வினியோகிப்பதை தவிர்க்க வேண்டும்.

(v) அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களது தொண்டர்கள், அனுதாபிகளிடையே ஏற்படும் மோதலையும், பதட்ட நிலையையும் தவிர்க்கும் வகையில், அரசியல் கட்சிகளால்/ வேட்பாளர்களால் வாக்குச் சாவடிகளுக்கு அருகில் அமைக்கப்படும் முகாம்களுக்கருகில் தேவையில்லாமல் கூட்டம் கூடுவதை தவிர்க்க வேண்டும்.

(vi) வேட்பாளர்களின் அலுவலகம் கீழ்கண்டவாறு எளிமையாக இருக்க வேண்டும்

- சுவரொட்டிகள், கொடிகள், சின்னங்கள் அல்லது வேறு பிற பிரச்சார பொருட்கள் இல்லாமல் இருக்க வேண்டும்.
- அம்முகாம்களில் தின்பண்டங்களை விநியோகிக்கவோ அல்லது மக்கள் கூடுவதை அனுமதிக்கவோ கூடாது,

(vii) வாக்குப் பதிவு நாளன்று வாகனங்கள் இயக்கப்படுவது குறித்த கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதில் அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும். வாகனங்களுக்கான அனுமதி சீட்டுகளைப் பெற்று அவற்றை வாகனங்களில் தெளிவாகத் தெரியும்படி ஒட்டி வைக்க வேண்டும்.

வேட்பாளரின் தேர்தல் அலுவலகம்

- இரண்டு நபர்கள் மட்டுமே பணி செய்யும் வகையில் வாக்காளர் உதவு மையங்கள் / பந்தல்களை வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டருக்கு அப்பால் அமைத்துக்கொள்ளலாம் என்பதை வாக்குப்பதிவு முகவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
- அரசியல் கட்சியின் பிரதிநிதி எவரும் வாக்காளர்களுக்கு உதவும் வகையில் 200 மீட்டர் சுற்றுப்பகுதிக்குள் அமரக் கூடாது.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் பெயர்கள் உள்ள இடத்தை அறிந்து கொள்ள உதவும் வகையில் வாக்குச்சாவடிக்கு அருகில், ஆனால் 200 மீட்டருக்கு அப்பால் வேட்பாளர் தேர்தல் அலுவலகங்களை அமைத்துக் கொள்ளலாம்.
- வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டருக்கு அப்பால் வாக்காளர்களுக்கு தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்ட அடையாள சீட்டுகளை விநியோகிப்பதற்காக தங்களது கட்சியின் முகவர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள மழை / வெயிலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள ஏதுவாக ஒரு குடை அல்லது தார்பாலினோடு ஒரு மேஜை மற்றும் இரண்டு நாற்காலிகளை வழங்க வேட்பாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இம்மேஜைகளைச் சுற்றி கூட்டம் சேர அனுமதிக்கப்பட மாட்டாது.
- அரசியல் கட்சிகளால் வழங்கப்படும் வாக்காளர் சிலிப்புகள் வெள்ளை நிறத்தில்
  மட்டுமே இருக்க வேண்டும். அதில் சின்னமோ அல்லது அரசியல் வாசகங்களோ இருத்தல் கூடாது.
- வாக்காளர் உதவு மையங்களை நிர்வகிக்க அரசியல் கட்சிகளால் நியமிக்கப்படும் நபர்கள் அந்த வாக்குச்சாவடிக்குட்பட்ட பகுதியின் வாக்காளர்களாகவும் புகைப்பட அடையாள அட்டை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். தேர்தல் பார்வையாளர் / மண்டல அலுவலர் (Sector Magistrate) கேட்கும்பொழுது அப்புகைப்பட அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும்,
- குற்றப் பின்னணி கொண்ட எவரையும் அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தக் கூடாது.
- உள்ளூர் காவல்துறை இதுபோன்ற நபர்களின் நடமாட்டத்தின் மீது தமது கண்காணிப்பை வைத்திருக்க வேண்டும்.

வாக்குச் சாவடி மையத்திலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள் பிரச்சாரம் செய்ய தடை

- வாக்குச் சாவடி மையத்திலிருந்து 200 மீட்டருக்குள் பிரச்சாரம் செய்வது தேர்தல் சட்டத்தின்படி ஒரு குற்றமாகும்.

- இக்குற்றத்தில் ஈடுபடும் எவர் ஒருவரும் பிடியாணை ஏதுமின்றி காவல்துறையால் கைது செய்யப்படலாம்; மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951, பிரிவு 130-ன்படி அவர் மீது வழக்கும் தொடரலாம்.
- வாக்குச் சாவடி மையத்திலிருந்து 200 மீட்டருக்குள் வாக்காளர்களை வாகனங்களில் ஏற்றி வருவதும் பிரச்சாரம் செய்வதும் ஒரு குற்றமாகும். தனியார் வாகனங்கள் அனைத்தும் வாக்குச் சாவடி மையத்திலிருந்து 200 மீட்டருக்கு அப்பால் நிறுத்தப்பட வேண்டும்.

  குறிப்பு: வாக்காளர் உதவு மையங்கள் / பந்தல்களை வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டருக்கு அப்பால் அமைத்துக் கொள்ளலாம்; வாக்காளர்களுக்கு உதவும் வகையில் அரசியல் கட்சியின் பிரதிநிதி எவரும் 200 மீட்டர் சுற்றுப்பகுதிக்குள் அமர்ந்திருக்கக்கூடாது; தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வாக்குச்சாவடிக்கு 200 மீட்டருக்கு அப்பால் (வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் பெயர்கள் உள்ள இடத்தை அறிந்து கொள்ள உதவும் வகையில்) வேட்பாளர் தேர்தல் அலுவலகங்களை அமைத்துக் கொள்ளலாம் என்றாலும், வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டருக்குள் பிரச்சாரம் ஏதும் செய்யக்கூடாது என்பது வலியுறுத்தப்படுகிறது.

V. வாக்குச் சாவடி

வாக்காளர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உரிய அனுமதி சீட்டு பெற்றவர்கள் தவிர வேறு எவரும் வாக்குச்சாவடிக்குள் நுழையக் கூடாது.

VI. தேர்தல் பார்வையாளர்கள்

தேர்தல் நடைமுறையை கண்காணிக்க புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையம் தேர்தல் பார்வையாளர்களை நியமிக்கிறது. வேட்பாளர்கள் அல்லது அவர்களது முகவர்கள் தேர்தல்கள் நடத்துவது தொடர்பாக குறிப்பிட்ட புகார் அல்லது பிரச்சினை ஏதுமிருந்தால் பார்வையாளரின் கவனத்திற்கு கொண்டு வரலாம்.

VII. ஆளுங்கட்சி

ஆட்சிப் பொறுப்பிலுள்ள கட்சியானது தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக தனது அரசு பதவியை பயன்படுத்தியுள்ளது என்னும் புகார் எழுவதற்கு இடமளிக்கப்படாததை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக :

(i) (அ) அமைச்சர்கள் தமது அலுவல் பயணத்தை தேர்தல் பணியோடு இணைத்துக் கொள்ளக்கூடாது. மேலும், தேர்தல் பணிக்காக அரசு அமைப்புகளையோ அல்லது அரசு பணியாளர்களையோ பயன்படுத்திக் கொள்ளக் கூடாது

(ஆ) அரசு வானூர்திகள், வாகனங்கள், பிற அமைப்புகள் மற்றும் பணியாளர்கள் ஆளும் கட்சியின் நலனுக்காக பயன்படுத்தப்படக் கூடாது;

(ii) ஆளுங்கட்சியானது மைதானங்கள் முதலிய பொது இடங்களை தேர்தல் கூட்டம் நடத்துவதற்காகவும் மற்றும் தேர்தல்களுக்காக பயன்படுத்தப்படும் வானூர்திகளை நிறுத்துவதற்காகவும் ஏகபோக உரிமையுடன் எடுத்துக் கொள்ளக்கூடாது. அவ்விடங்கள் மற்றும் வசதிகள் ஆளுங்கட்சியால் எந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் பயன்படுத்தப்படுகிறதோ அதே முறையில் பயன்படுத்திக் கொள்ள பிற கட்சிகளும் வேட்பாளர்களும் அனுமதிக்கப்பட வேண்டும்.

(iii) ஓய்வு இல்லங்கள், பயணியர் மாளிகைகள் அல்லது ஏனைய அரசு குடியிருப்புகளை ஆட்சியிலிருக்கும் கட்சி அல்லது அக்கட்சியின் வேட்பாளர் மட்டுமே பயன்படுத்தக் கூடாது. அவற்றை ஏனைய கட்சியினரும் வேட்பாளர்களும் நியாயமான முறையில் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். ஆனால் கட்சி அல்லது வேட்பாளர் எவரும் அத்தங்குமிடங்களை (அதனை ஒட்டியுள்ள வளாகம் உட்பட) தேர்தல் அலுவலகமாகவும் தேர்தல் பிரச்சாரத்திற்கான பொதுக் கூட்டம் நடத்துமிடமாகவும் பயன்படுத்தக் கூடாது.

(iv) தேர்தல் நேரத்தில் செய்தித் தாள்களிலும், இதர ஊடகங்களிலும் அரசு செலவில் விளம்பரங்களை வெளியிடுவதையும் ஆளுங்கட்சியின் செல்வாக்கினை மேம்படுத்தும் நோக்கில் அரசியல் செய்திகளை வெளியிடுவதற்கும் மற்றும் விளம்பரப்படுத்துவதற்கும் அரசு மக்கள் தொடர்பு அமைப்புகளை தவறாக பயன்படுத்துவதையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

(v) புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நேரத்திலிருந்து அமைச்சர்களும் பிற அதிகார அமைப்புகளும் விருப்ப நிதிகளிலிருந்து மானியங்கள் / ஒதுக்கீடுகளை வழங்கக் கூடாது,

(vi) புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நேரத்திலிருந்து அமைச்சர்களும் பிற அதிகார அமைப்புகளும் செய்யக்கூடாதவையாவன -

(அ) எவ்வித நிதி ஒதுக்கீடுகளையும் உறுதிமொழிகளையும் அறிவித்தல்; அல்லது

(ஆ) எந்த பணிகளுக்கும் திட்டங்களுக்கும் (அரசு உயர் அலுவலர்களைத் தவிர) அடிக்கல்கள் நாட்டுதல் போன்றவை செய்தல்; அல்லது

(இ) சாலைகள் அமைப்பது, குடிநீர் வசதிகள் செய்து தருவது போன்றவை குறித்து வாக்குறுதி அளித்தல் ; அல்லது

(ஈ) ஆளுங்கட்சிக்கு சாதகமாக வாக்காளர்களிடம் செல்வாக்கு ஏற்படுத்தும் வகையில், அரசு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றில் தற்காலிக நியமனம் செய்தல்

(vii) மத்திய அல்லது மாநில அமைச்சர்கள், ஒரு வாக்காளர் என்ற நிலையில் அல்லாது வாக்குச்சாவடிக்குள்ளோ அல்லது வாக்குச்சீட்டு எண்ணுமிடத்திற்குள்ளோ நுழையக்கூடாது.

(viii) சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு வாக்காளர் என்ற நிலையில் அல்லாது வாக்குச்சாவடிக்குள்ளோ அல்லது வாக்குச்சீட்டு எண்ணுமிடத்திற்குள்ளோ நுழையக்கூடாது,

(ix) மேயர்கள் அல்லது உள்ளாட்சித் தலைவர்கள் மற்றும் கவுன்சிலர்கள் / வார்டு உறுப்பினர்கள் ஒரு வாக்காளர் என்ற நிலையில் அல்லாது வாக்குச்சாவடிக்குள்ளோ அல்லது வாக்குச்சீட்டு எண்ணுமிடத்திற்குள்ளோ நுழையக்கூடாது.

VIII. நடத்தை விதி தொகுப்பு - செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும்

திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து

1) வாக்காளர்களை, பதவியில் இருக்கும் ஆளும் கட்சிக்கு சாதகமாக கவரும் நோக்கத்தில், எவ்வித புதிய திட்டங்கள், நிகழ்ச்சிகள் அல்லது எவ்வகையான மானியங்களையும் அறிவிக்கவோ அல்லது அது தொடர்பான வாக்குறுதிகளை வழங்கவோ அல்லது அடிக்கல்கள் நாட்டவோ கூடாது.

(அ) மேற்படி கட்டுப்பாடுகள் புதிய திட்டங்களுக்கும் நடைமுறையிலுள்ள திட்டங்களுக்கும் பொருந்தும்.

(ஆ) அரசின் திட்டங்களுக்காக புதியதாக நிதி ஒதுக்கீடு செய்யக்கூடாது.

(இ) எவ்வகையிலான விருப்ப நிதியிலிருந்தும் புதிய பணிகள் மற்றும் திட்டங்களை மேற்கொள்ளக்கூடாது, இந்நேர்வில், விருப்ப நிதி என்பது, வரவு செலவு திட்டத்தில் பொதுவாக ஒதுக்கீடு செய்யப்பட்டு மாதிரி நன்னடத்தை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே முடிவு செய்யப்படாமல், நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள திட்டங்களுக்கான நிதிகளுள் அடங்கும்.

(ஈ) மாதிரி நடத்தை விதிகள் செயல்பாட்டில் இருக்கும்போது ஏற்கனவே ஒரு திட்டம் அனுமதிக்கப்பட்டு விட்டது என்பதாலோ அல்லது ஆளுநர் அவர்களின் உரை / அமைச்சரின் வரவு செலவு திட்டஉரை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டிருப்பதாலோ இத்திட்டங்களை செயல்படுத்தலாம் என அர்த்தம் கொள்ளக்கூடாது.

(உ) மாநிலத்தில் தேர்தல் நடைமுறை செயல்பாட்டில் இருக்கும் எந்த ஒரு பகுதியிலும் நலத்திட்ட உதவிகளுக்காக புதியதாக நிதி ஒதுக்கீடு செய்வதும் பணிகளுக்கான ஒப்பந்தம் வழங்குவதும் கூடாது.

(ஊ) பாராளுமன்ற உறுப்பினருக்கான (மாநிலங்களவை உறுப்பினர்கள் உட்பட) தொகுதி மேம்பாட்டு நிதி (LAD) அல்லது சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி (MLACDS) ஆகியவற்றின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளும் இதில் அடங்கும்.

2. இருப்பினும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நிறைவடையும் தருவாயில் உள்ள திட்டங்களைப் பொறுத்தமட்டில், மக்கள் நலனுக்காக அவை செயல்படுத்தப்பட வேண்டியதைக் கருத்தில் கொண்டு அவற்றை நிறுத்தவோ அல்லது தாமதப்படுத்தவோ கூடாது.

- இத்தகைய திட்டங்களை செயல்படுத்தும்போது வாக்காளர்களை ஆளுங்கட்சிக்கு சாதகமாக திருப்புவதாக தோற்றம் அளிக்காமல் அல்லது அத்தகைய தோற்றத்தை ஏற்படுத்தாமல் இருக்கும் வகையில் அரசியல் செயல்பாட்டாளர்களை ஈடுபடுத்தாது அரசு நிர்வாகத்தினராலேயே ஆரவாரமின்றியும் ஆடம்பர விழாக்களின்றியும் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்;

3. தேர்தல்கள் முடியும்வரை, செயல்பாட்டில் இருக்கும் திட்டங்களாக இருந்தாலும் பயனாளி சார்ந்த திட்டங்கள் குறித்த ஆய்வையும் அவற்றை

செயல்படுத்துவதையும் அரசியல் சார்ந்த நிர்வாக அமைப்பினர் (அமைச்சர்கள் போன்றவர்கள்) நிறுத்திக் கொள்ள வேண்டும்.

4. பணி ஆணைகள் முன்னரே வழங்கப்பட்டிருந்தாலும் களத்தில் பணி தொடங்கப்படாமலிருந்தால் அப்பணியை இப்போது தொடங்கக்கூடாது. தேர்தல் நடைமுறை நிறைவுற்ற பின்னரே இப்பணிகள் தொடங்கப்படலாம்.

கீழ்க்காணும் வகையிலான பணிகள் அரசு நிறுவனங்களால் செயல்பாட்டிலிருந்தால் தொடரப்படலாம்.

(அ) தேவையான அனைத்து ஒப்பளிப்புகளையும் முன்னரே பெற்று களத்தில் தொடங்கப்பட்ட திட்டப் பணிகள் தொடரலாம்.

(ஆ) மாதிரி நடத்தை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே பெயர்களுடன் குறிப்பிட்ட பயனாளிகள் கண்டறியப்பட்டிருந்தால் அந்நலத்திட்டங்களை தொடரலாம்.

(இ) தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள பயனாளிகளை நடைமுறையில் உள்ள திட்டங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம். தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் (NREGA) உரிய சட்டப் பிரிவுகளின்படி அனுமதிக்கப்படும் புதிய திட்டங்களை, முன்னரே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்புதலும் பெறப்பட்ட திட்டங்களின் தொகுப்பில் இருந்தால் மட்டும் ஏற்கனவே பதிவு செய்துள்ள பயனாளிகளுக்காக செயல்படுத்திக் கொள்ளலாம்.

5. எந்த ஒரு பணிக்கும் அது வரையறுக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு நிதித்துறையின் ஒப்புதலும் பெறப்பட்டிருந்தால் அப்பணியின் முடிக்கப்பட்ட பகுதிக்கு நிதி விடுவிக்க எந்த தடையும் இல்லை.

6. மாதிரி நடத்தை விதி செயல்பாட்டிற்கு வருவதற்கு முன்னரே கீழ்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்திருந்தால் கீழ்க்காணும் வகையிலான (பயனாளி சார்ந்த அல்லது பணி சார்ந்த) புதிய பணிகளை புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்திற்கு தகவல் தெரிவித்தபின் செயல்படுத்தலாம்.

அ) முழு நிதி ஒதுக்கீடு பெற்றிருந்தால்

ஆ) நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் நிதி ஒப்பளிப்புகள் பெறப்பட்டிருந்தால்

இ) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தால் மற்றும்

ஈ) ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பணி முடிக்கப்படவேண்டும் எனவும் தவறினால் ஒப்பந்தகாரருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் எனவும் ஒப்பந்தத்தில் நிபந்தனை இருந்தால்

உ) மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்படாதிருந்தால் அந்நேர்வுகளில் தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி கோரி பெறப்பட வேண்டும்.

7. ஏற்கனவே கோரப்பட்ட உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகளை அவற்றிற்கான காலக்கெடு குறிப்பிடப்பட்டிருப்பின் பரிசீலித்து முடிவு செய்யலாம்,

8. உலக அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் நீங்கலாக (Global Tenders) இதர ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தலுக்கு முன்னதாக ஏற்கனவே கோரப்பட்டிருந்தால் அவை மதிப்பீடு செய்யப்படலாமே தவிர, புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியின்றி இறுதி செய்யப்படக் கூடாது, ஏற்கனவே கோரப்படாமல் இருக்கும் நிலையில், புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியின்றி ஒப்பந்தப்புள்ளிகளை கோரக் கூடாது,

புதிதாக ஏதாவது பணி (நிவாரணப்பணி உட்பட) அல்லது வளர்ச்சிப் பணியைத் தொடங்கும்போது அரசியல் செயல்பாட்டாளர் எவரையும் ஈடுபடுத்தி சம்பரதாயமான விழாவாக நடத்தக்கூடாது. அலுவலக பணியாளர்களோடு நடத்தப்பட்டாலும் ஒரு நல்வழக்கமாக திகழும் வகையில் வழக்கமான விழாக்களும் விளம்பரமும் குறைந்தபட்ச அளவினதாக இருக்க வேண்டும்.

ஏற்கனவே செயல்படுத்தப்படும் பணி / திட்டம் / நிகழ்ச்சியின் செயல்பாட்டு பகுதியை நீட்டிக்கவோ விரிவாக்கவோ கூடாது.

தனிப்பட்ட நபர் அல்லது நிறுவனம் போன்ற எந்த ஓர் அமைப்பிற்கும் அரசால் நிலம் ஒதுக்கப்படக் கூடாது,

அரசு அங்கம் வகிக்கும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது பிற ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி தேவை.

பன்னாட்டு வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நடத்தப்பட வேண்டிய பணிகள் மற்றும் விழாக்களுக்கும் ஆணையத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

IX. நிவாரண நடவடிக்கைகள்

(அ) ஒரு பேரிடர்பாடுக்குப் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகைகள் மற்றும் நிவாரண உதவிகளை அப்போது நடைமுறையில் பின்பற்றப்படும் அதே நடப்பு தொகைகள் / அளவுகளில் புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்திற்கு தகவல் தந்த பின்னர் நேரடியாக வழங்கலாம். நிர்ணயிக்கப்பட்ட உதவி தொகைகள் மற்றும் அளவுகளில் புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியின்றி எவ்வித மாற்றமும் செய்யக் கூடாது.

(ஆ) தனி நோயாளிகளுக்கு (பயனாளிகளுக்கு) பண உதவியை நேரிடையாக வழங்குவதற்குப் பதிலாக முதலமைச்சர் / பிரதம மந்திரி நிவாரண நிதியிலிருந்து மருத்துவமனைகளுக்கு நேரடியாக வழங்கப்படும் தொகைகளை தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்காமலேயே வழங்கலாம்.

(இ) பேரிடர்களால் பாதிக்கப்பட்ட நபர்களின் துயர்களைக் குறைக்கும் நோக்கில் நேரிடையாகவும் தனிப்பட்ட முறையிலும் மேற்கொள்ளப்படும் உடனடி நிவாரணப் பணிகள் மற்றும் நடவடிக்கைகளை புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்திற்கு தகவல் தெரிவித்துவிட்டு மேற்கொள்ளலாம்.

(ஈ) இயற்கை இடர்பாடுகளின் தாக்கங்களைக் குறைக்கும் நோக்கில் ஆறு / ஏரி கரைகள், கால்வாய்கள் முதலானவற்றை பழுது பார்த்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் புதிய பணிகளை புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி பெற்றே மேற்கொள்ள வேண்டும்.

(உ) மேலும், எந்த ஒரு பகுதியும் வறட்சி / வெள்ளம் அல்லது இதுபோன்ற வேறு அழிவுகளால் பாதிக்கப்பட்டது ஆணையத்தின் முன் அனுமதி இன்றி அறிவிக்கப்படக் கூடாது, பேரழிவால் பாதிக்கப்பட்ட பகுதி என ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பகுதியின் எல்லையை ஆணையத்தின் முன் அனுமதியின்றி விரிவுபடுத்தவும் கூடாது,

(ஊ) இதேபோல், பிரதம மந்திரி / முதலமைச்சர் நிதியிலிருந்து நபர்கள் அடங்கிய ஒரு குழுவிற்கு வழங்கப்படும் குறிப்பிட்ட உதவிக்கு புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி அவசியம்.

X. அரசு செலவில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள்

அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் / அரசின் சாதனைகள் தொடர்பான எந்த வகையிலான மற்றும் அனைத்து விளம்பரங்களும் அரசு செலவில் மேற்கொள்ளப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

XI. அலுவலர்களின் பணி மாறுதல், பணி நியமனம் மற்றும் பணி சேர்ப்பு தொடர்பாக

- தேர்தல் நடவடிக்கைகள் முடிவு பெறும் வரை தேர்தல் நடத்துவதில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் / அலுவலர்களின் பணி மாறுதல் முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது.

- அவசர நிர்வாக காரணங்களுக்காக ஒரு அலுவலரின் பணி மாற்றம் அவசியமாக கருதப்படும் நேர்வுகளில் மாநில அரசு அதற்கான நியாயமான காரணங்களோடு புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தை முன் அனுமதிக்காக அணுகலாம்.

- இக்காலகட்டத்தில், புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியின்றி அரசு / பொது துறை நிறுவனங்கள் / உள்ளாட்சி அமைப்புகளில் பணி நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகளை வழங்கக் கூடாது.

- மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் / மாநில அரசு பணியாளர் தேர்வாணையம் அல்லது பணியாளர் தேர்வாணையம் அல்லது ஏனைய சட்டபூர்வமான அமைப்புகளின் மூலம் மேற்கொள்ளப்படும் வழக்கமான பணி சேர்ப்பு / நியமனம் அல்லது பதவி உயர்வுகள் தொடரலாம். மாநிலத்தில் உள்ள சட்டபூர்வமல்லாத நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணி சேர்ப்புகளுக்கு புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி அவசியம்.

XII. அமைச்சர்களின் பயணங்கள்

- பொது நலன் பொருட்டு தவிர்க்க முடியாத அலுவலக பணி காரணமாக மத்திய அமைச்சர் ஒருவர் அவரது தலைமையிடத்தை விட்டு பயணம் மேற்கொள்ளும்போது இது குறித்து சான்றுரைக்கும் வகையில் ஒரு கடிதத்தை இந்திய அரசின் தொடர்புடைய துறையின் செயலாளர்,

அமைச்சர் செல்ல உத்தேசித்திருக்கும் மாநிலத்தின் தலைமைச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும். ஆணையத்திற்கும் நகலிட வேண்டும். தலைமைச் செயலாளர் இப்பயணத்தின்போது, அமைச்சருக்கு அரசு ஊர்தியும் தங்குமிடமும் வழங்குவதோடு அவரது அரசுமுறை பயணத்திற்கான வழக்கமான இதர உபசரிப்புகளையும் வழங்கலாம்.

- தேர்தல் காலத்தின்போது எந்த ஒரு மாநில அமைச்சரும் எந்த உள்ளாட்சி அமைப்பிற்கும் அலுவலக பயணம் மேற்கொள்ளக் கூடாது.
    - ஆனால், தொடர்புடைய துறைக்கு பொறுப்பு வகிக்கும் நிலையில் ஓர் அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ சட்டம் ஒழுங்கு சீர்கேடு அல்லது இயற்கை பேரழிவு அல்லது இதுபோன்ற அவசர காலங்களில் நேரடியாக வருகை தந்து இது குறித்து கண்காணித்து ஆய்வு செய்ய வேண்டிய / தீர்வு காண வேண்டிய / நிவாரணம் அளிக்க வேண்டிய காரணங்களுக்காக மற்றும் இது போன்ற காரணத்திற்காக அமைச்சர்களும் முதலமைச்சரும் அரசு முறைப் பயணம் மேற்கொள்ள விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- இருப்பினும், மேற்படி அலுவலக நிமித்தமான பயணத்திற்கு முன்னதாகவோ அல்லது பயணத்தின்போதோ அல்லது அதனைத் தொடர்ந்தோ எந்த அமைச்சரும் தேர்தல் பிரச்சாரம் அல்லது அரசியல் பணிகளை மேற்கொள்ளவோ அல்லது அவற்றை அப்பயணத்தோடு இணைத்துக் கொள்ளவோ கூடாது. அலுவல் நிமித்தமான பணியை தேர்தல் பிரசாரத்தில் அல்லது தேர்தல் பணிகளில் சம்பந்தப்படுத்திக் கொள்ளக் கூடாது,
- மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான கலந்தாலோசனையுடன் இத்தகைய ஏற்பாடுகளை ஆணையம் கண்காணிக்கும்.
- தேர்தல் அறிவிப்பினைத் தொடர்ந்து வரும் தேர்தல் நடைபெறும் காலங்களில் எந்த ஒரு அமைச்சரும் தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் எந்த உள்ளாட்சி அலுவலர் அல்லது அரசு அலுவலரை அலுவலக ரீதியான கலந்தாய்வுக்கு நேரில் ஆஜராகும்படி அழைக்கக் கூடாது.
- தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு உள்ளாட்சி அமைப்புக்கு தனிப்பட்ட முறையில் வருகை தரும் அமைச்சரை ஒரு அரசு அலுவலர் நேரில் சென்று சந்தித்தால் அவர் தொடர்புடைய சட்ட விதிகளின்கீழ் நன்னடத்தை மீறிய குற்றச்செயல் புரிந்தவராக கருதப்படுவார். கூடுதலாக,

அவர் சட்டக்கூறுகளை மீறியவராகவும் தண்டனைக்குட் படுத்தப்படுபவராகவும் கருதப்படுவார்.

- மத்திய / மாநில அமைச்சர்கள் தனிப்பட்ட வருகையின்போது தங்களது சொந்த வாகனங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

- அத்தகைய தனிப்பட்ட வருகைகளின்போது அமைச்சர்களோடு அவர்களது தனிப்பட்ட அலுவலக பணியாளர்கள் உடன் செல்லக் கூடாது,

- தேர்தல் தொடர்பான அதிகாரிகள் மற்றும் தேர்தல் பார்வையாளர்கள் தங்குவதற்கு அரசு மற்றும் பொது துறை நிறுவனங்களின் கீழ் இயங்கும் விருந்தினர் மாளிகைகள் தேவைப்படும் என்பதால் அவற்றில் எந்த அமைச்சரோ, பாராளுமன்ற உறுப்பினரோ, சட்டமன்ற உறுப்பினரோ, மேயர்/தலைவர், கவுன்சிலர்/ வார்டு உறுப்பினரோ அல்லது அரசியல் தொடர்புடையவர்களோ தங்க அனுமதிக்கப்பட மாட்டாது. அரசால் 'Z' அலகு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளவர்களுக்கு மட்டும் இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- அலுவலக வாகனங்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்படக் கூடாது. ('அலுவலக வாகனங்கள்' என்பது அரசு, பொது துறை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், விற்பனை வாரியங்கள் / முகமைகள், கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட தன்னாட்சி குழுமங்கள் அல்லது பொது நிதியிலிருந்து சிறிய அளவிலாயினும் முதலீடு செய்யப்பட்டிருக்கும் இதர அமைப்புகளுக்கு சொந்தமான வாகனங்களைக் குறிக்கும்).

- அமைச்சர்கள் அவர்களது அதிகாரபூர்வமான இல்லத்திலிருந்து அலுவலகத்திற்கு, அலுவலகப் பணிகளின் நிமித்தம் தினசரி பயணம் மேற்கொள்ள மட்டுமே அவர்களது அலுவலக வாகனங்களை பயன்படுத்த உரிமை உடையவர்களாவர். ஆனால், இத்தகைய தினசரி பயணங்கள் தேர்தல் பணிகள் அல்லது அரசியல் செயல்பாடுகளுடன் தொடர்புடையவையாக இருக்கக் கூடாது.

- ஓர் அரசியல் பிரமுகருக்கு மாநில நிர்வாகத்தால் பாதுகாப்பு ஏற்பாடு அளிக்கப்பட்டிருந்தாலும் தேர்தல் பிரச்சாரத்தின்போது பைலட் கார்களையோ, எந்த வண்ணத்திலுமான எச்சரிக்கை விளக்குகள் பொருத்தப்பட்ட கார்களையோ அல்லது எந்த வகையிலான சைரன்கள் பொருத்தப்பட்ட கார்களையோ அவர் பயன்படுத்தக் கூடாது.

(பயன்படுத்தப்படும் வாகனம் அரசுக்கு சொந்தமாக இருந்தாலும் அல்லது தனியாருக்கு சொந்தமானதாக இருந்தாலும் இவ்விதி பொருந்தும்).

- தன்னாட்சி அமைப்புகளின் பணியாளர்கள் அலுவலக வாகனங்களை கட்சிப் பணிகளுக்கு பயன்படுத்தக் கூடாது,

- தவறாக பயன்படுத்தப்படும் எந்த ஒரு வாகனமும் பறிமுதல் செய்யப்படும்,

XIII. வாகனங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுத்தல்

- தேர்தல் பிரசாரத்தின்போதும், வாக்குப் பதிவு நாளன்றும் வாகனங்களை பயன்படுத்துதல் மற்றும் அவற்றின் போக்குவரத்து தொடர்பான கட்டுப்பாடுகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்,

- தேர்தல் நேரங்களில் வாகனங்களை பயன்படுத்துதல் மற்றும் அவற்றின் போக்குவரத்து தொடர்பான அறிவுரைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறுகள் 243K மற்றும் 243ZA கீழ் புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

XIV. வேட்புமனு தாக்கலின்போது கட்டுப்பாடுகள்-

- பயன்படுத்துவதற்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் நேரத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலரது அலுவலகத்திற்கு 200 மீட்டர் தொலைவிற்குள் அதிகப்படியாக மூன்று வாகனங்கள் மட்டுமே வர அனுமதிக்கப்படும்.

XV. தேர்தல் பிரச்சாரத்தின்போது வாகனங்கள்-

- தேர்தல் பிரச்சார காலங்களில், வேட்பாளர்களும் அவர்களது முகவர்களும், கட்சித் தலைவர்களும், அவர்களது தொண்டர்களும் உள்ளாட்சி பகுதிக்குள் ஒரு வேட்பாளரின் ஆதரவாளர்களை அழைத்துச் செல்ல தனியார் வாகனங்களை பயன்படுத்தும் நிகழ்வுகள் நடந்துள்ளன. இதுபோன்ற அநேக நிகழ்வுகளில் வாக்காளர்களின் மனதில் ஒருவித அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் உடற்பலம் மிக்க சமூக விரோதிகளை வெளிப்படையாக அவ்வாகனங்களில் அணிவகுக்கச் செய்கின்றனர். இதனால் வாக்காளர்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்கவோ அல்லது ஒட்டுமொத்தமாக வாக்களிக்காமல் விலகி இருக்கவோ நேரிடுகிறது. தேர்தல் நேரத்தில் குழப்பம் விளைவிக்கும் நோக்கில் சட்டத்தால் அனுமதிக்கப்படாத ஆயுதங்கள் மற்றும்

வெடிமருந்துகளை கடத்துவதற்கும் இவ்வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- இதுபோன்ற விரும்பத்தகாத / சட்ட விரோத செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது கட்சித் தலைவர்களோடு செல்லும் நபர்களால் பயன்படுத்தப்படும் வாகனங்களில் சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் தளவாடங்கள் கொண்டு செல்வது போன்ற குற்றவியல் நடவடிக்கைகள் உட்பட்ட தீய செயல்களுக்காக அவ்வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கும் வகையில் அவ்வாகனங்களின் மீது மாவட்ட நிர்வாகத்தின் தீவிர கண்காணிப்பு இருக்க வேண்டும்,

- வாகனங்கள் ஏதும் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுத்தப்படுவது கண்டறியப்பட்டாலோ அல்லது வாக்காளர்களை பயமுறுத்தும் வகையில், அவர்களது மனதில் அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கில் சமூக விரோதிகளை ஏற்றிச்செல்ல அவ்வாகனங்கள் பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டாலோ, நிர்வாகம் அத்தகைய வாகனங்களை பறிமுதல் செய்ய வேண்டும்; தேர்தல் நடைமுறைகள் முடிவடையும் வரை அவற்றை விடுவிக்கக் கூடாது.

- மேலும், வாகன உரிமையாளர், வாகனத்தில் இருந்தவர் / இருந்தவர்கள் மற்றும் வேட்பாளர் / இத்தகைய சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் அரசியல் கட்சி ஆகியோர் மீது சட்டப்படி குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- சுதந்திரமான, நேர்மையான மற்றும் அமைதியான தேர்தல்கள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், மாவட்ட நிர்வாகம், தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்ட உடனேயே வாகனங்களை சோதனை செய்யும் நடவடிக்கைகளை முடுக்கி விட வேண்டும். இந்நடவடிக்கைகள் தேர்தல்கள் முடியும் வரை தொடர வேண்டும்,

- வாகனங்கள் சென்று வருவதை முறைப்படுத்தும் வகையில், அனுமதிக்கப்பட வேண்டிய அனைத்து வாகனங்களும் தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்படும் அனுமதிச் சீட்டுகளை வைத்திருக்க வேண்டும். அதாவது, தேர்தல் பிரசாரத்திற்கான அனைத்து வாகனங்களும் தேர்தல் நடத்தும் அலுவலரின் முன் அனுமதியுடனேயே இயக்கப்பட வேண்டும். மேலும், அவ்வனுமதிச் சீட்டினை அசலாக (நகல் அல்ல) வாகனத்தின் முன்புற கண்ணாடியின் மேல் நன்கு தெரியும்படி ஒட்ட வேண்டும்.

வழங்கப்படும் அனுமதிச் சீட்டுகளை நகலெடுத்து தவறாக பயன்படுத்திக் கொள்ள வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினரை அனுமதிக்கக் கூடாது.

- வழங்கப்படும் அனுமதிச் சீட்டு தூரத்திலிருந்தே கண்களுக்கு புலப்படும் வகையில் போதுமான பரிமாணத்தில் இருக்க வேண்டும்.

- வாகனத்தின் எண் மற்றும் எந்த வேட்பாளரின் சார்பாக அனுமதி வழங்கப்படுகிறதோ அவரின் பெயர் ஆகியவை அனுமதிச் சீட்டில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- தேர்தல் பிரசாரத்தின் பொருட்டு வாகனங்களை இயக்குவதற்கு பல்வேறு வேட்பாளர்களுக்கு அளிக்கப்படும் அனுமதிகள் குறித்த பட்டியல் உடனடியாக தேர்தல் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அப்பட்டியலில் கூடுதல் சேர்க்கை ஏதாவது செய்யப்பட்டால், அதையும் தேர்தல் பார்வையாளர்களுக்கு வழங்க வேண்டும்.

- மேற்குறிப்பிட்ட அறிவுரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு தொடர்புடைய மாநகர காவல் ஆணையர் / தொடர்புடைய மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரைச் சார்ந்ததாகும்.

- தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து தேர்தல் நடைமுறை முடிவுக்கு வரும் நாள்வரை தேர்தல் பிரச்சார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மகிழுந்துகள் / வாகனங்கள் அணிவகுத்துச் செல்கையில் மூன்று வாகனங்களுக்கு மேல் செல்ல அனுமதிக்கக் கூடாது,

- பாதுகாப்பிற்காக வரும் நீண்ட வாகன வரிசைகள் அவை ஏதாவது அமைச்சருடன் வந்தாலும்கூட இடைவெளி விட்டே அனுப்பப்பட வேண்டும். இருப்பினும், குறிப்பிட்ட ஏதொரு நபருக்காக வெளியிடப்படும் பாதுகாப்பு அறிவுரைகளுக்கேற்ப மாறுபடும்.

- அதாவது, பாதுகாப்பிற்காக வரும் வாகன வரிசையில், எவ்வகையிலும் ஒரு குறிப்பிட்ட நபரது வாகனம் மற்றும் அவருக்கு தரப்பட வேண்டிய பாதுகாப்பு நிலையைப் பொறுத்து உடன் வரும் பாதுகாப்பு வாகனங்களுடன் சேர்த்து மூன்று வாகனங்களுக்கு மேல் இருக்கக் கூடாது.

- இவ்வாறு பிரித்து அனுப்பப்படும் பாதுகாப்பு வரிசைகளுக்கிடையே குறைந்தது 300 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்,

XVI. நட்சத்திரப் பேச்சாளர்களுக்கான வாகனங்கள்

- தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பயன்படுத்துவதற்காக, சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட தேர்தல் அலுவலராலேயே தொடர்புடைய நபரின் பெயரில் அனுமதி ஆணை வழங்கப்பட வேண்டும். அந்நபர், தாம் பயன்படுத்தும் வாகனத்தின் முன்புறக் கண்ணாடியின் மீது அவ்வாணையை நன்கு தெரியும்படி ஒட்டி வைக்க வேண்டும்.

- இதற்கான விண்ணப்பங்கள், தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் மாவட்ட தேர்தல் அலுவலரிடம் தரப்பட வேண்டும்.

XVII. படக்காட்சி வாகனங்கள்

- அனுமதி ஏதும் வழங்கப்படுவதற்கு முன்பாக ஓர் அரசியல் கட்சியால் மாவட்டங்களுக்கிடையே படக்காட்சி வாகனங்கள் இயக்கப்பட்டால் இவ்வாகனப் பயன்பாடு மோட்டார் வாகனங்கள் சட்டத்திற்கு உட்பட்டு உள்ளதா என்பதை மாவட்ட தேர்தல் அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

XVIII. மாவட்ட தேர்தல் அலுவலர் / தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய வாகன விபரங்கள்

- தேர்தல் பிரச்சாரம் தொடங்கப்படுவதற்கு முன், பிரச்சாரத்திற்காக பயன்படுத்தப்பட உள்ள அனைத்து வாகனங்கள் குறித்த விவரங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது அவரால் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்ட அலுவலர்/அலுவலர்களிடம் ஒப்படைக்கும்படி போட்டியிடும் வேட்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

- வேட்பாளர் அல்லது அவரது முகவர் கூடுதலான வாகனங்களை இயக்கிக் கொள்ள முன்னதாகவே அறிவிப்பு தந்த பின்னரே எந்த ஒரு கூடுதல் வாகனத்தையும் இயக்கிக் கொள்ளலாம்.

- தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள் குறித்த விவரங்களை தெரிவிக்கும்போது, அவ்வாகனங்கள் இயக்கப்படவுள்ள பகுதிகள் குறித்த விவரங்களும் தெரிவிக்கப்பட வேண்டும்.

- பெறப்படும் மேற்படி விவரங்கள் மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் பார்வையாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

XIX. அனுமதி பெறப்படாத வாகனங்களைப் பயன்படுத்துவது

- தேர்தல் பிரச்சாரத்திற்கென மாவட்ட நிர்வாகத்திடம் பதிவு செய்யப்படாத எந்த வாகனமும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவது கண்டறியப்பட்டால் அது அவ்வேட்பாளரின் அனுமதி பெறாத பிரச்சாரமாக கருதப்படுவதுடன் இந்திய குற்றவியல் சட்டம் (IPC) பகுதி IX A மற்றும் தொடர்புடைய சட்டங்களின் கீழ் வகுக்கப்பட்டுள்ள தண்டனைக்கு உரியதாக கருதப்படும். எனவே, அவ்வாகனம் பிரச்சார பயன்பாட்டிலிருந்தும் உடனடியாக வெளியேற்றப்படும்.

XX. வாக்குப் பதிவின்போது வாகனங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுத்தல்

(i) வாக்குச்சாவடிக்கு சென்று வர வாக்காளர்களுக்கு இலவச பயணம் ஏற்பாடு செய்யும் வகையில் வேட்பாளரோ அவரது முகவரோ அல்லது அவர்களது ஒப்புதலோடு வேறு எந்த நபரோ வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதும் பெறுவதும் பயன்படுத்துவதும் தொடர்புடைய சட்டங்களின் நோக்கில் ஒரு 'நேர்மையற்ற செயலாக' கருதப்படும். இந் 'நேர்மையற்ற செயல் தண்டனைக்குரியதோடு அபராதம் விதிக்கத்தகுந்ததாகும்.

(ii) ஒரு உள்ளாட்சி அமைப்பிற்கான தேர்தலில், ஒவ்வொரு வேட்பாளரும் வாக்குப் பதிவு நாளன்று தமது சொந்த உபயோகத்திற்காக ஒரே ஒரு வாகனத்தை மட்டும் குறிப்பிட்ட உள்ளாட்சி முழுமைக்கும் பயன்படுத்திக் கொள்ள தகுதியுடையவராவார்.

- மேற்படி வாகனத்திற்கான அனுமதிகள் தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்படும்.

- வேட்பாளர்கள் அவர்களது வாகனங்களை தொடர்புடைய அதிகாரிகளிடம் பதிவு செய்துகொள்ள வேண்டும். அதிகாரிகளால் வழங்கப்படும் அனுமதிச் சீட்டுகளை வாகனங்களின் முன்புறக் கண்ணாடியின் மீது ஒட்ட வேண்டும்,

- வேறு எந்த வாகனங்களையும் அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள், முகவர்கள் மற்றும் அனுதாபிகள் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது.

- வேட்பாளரின் அந்தஸ்தின் அடிப்படையில் எந்த விலக்கும் அளிக்கப்பட மாட்டாது.

- வேட்பாளர் பயன்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் வாகனத்தை வாக்குப் பதிவு நாளன்று வேறு எந்த நபரும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது,

- வாகனங்களை இயக்குவது தொடர்பான அறிவுரைகள், வாக்குப் பதிவு நிறைவடைய நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு முன்னதான 24 மணி நேரத்திலிருந்து வாக்குப் பதிவு முடிவடையும் நேரம் வரையிலான காலத்திற்கு பொருந்தும்.
- பணியில் இருக்கும் அரசு அலுவலருக்கும் நோயாளி அல்லது முதியவர் / பலவீனமான நபர்களை அழைத்து செல்வதற்கும் இக்கட்டுப்பாடுகள் பொருந்தாது,

- மேற்குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களை மீறுபவர்கள் மீது தொடர்புடைய சட்டங்கள் மற்றும் இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு IXA-ன்கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மோட்டார் சட்டத்தின்கீழும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- மேற்குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

- தேர்தல் பயன்பாட்டிற்கின்றி இதர நியாயமான உண்மையான பயன்பாட்டிற்கென கீழ்குறிப்பிட்டுள்ள வகையிலான வாகனங்களை வாக்குப் பதிவு நாளன்று இயக்க அனுமதிக்கலாம் :

அ) தேர்தல்களுடன் சம்பந்தப்படாத சொந்த பயன்பாட்டிற்கு உரிமையாளர்களால் பயன்படுத்தப்படும் தனியார் வாகனங்கள் ;

ஆ) வாகன உரிமையாளர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் தங்களது வாக்கினை பதிவு செய்தவற்காக வாக்குச் சாவடிக்குச் சென்று பயன்படுத்தப்படும் அவர்களது சொந்த வாகனங்கள். ஆனால் இவ்வாகனங்கள் வாக்குச் சாவடியிலிருந்து 200 மீட்டர் சுற்றளவுக்குள் வேறு எங்கும் செல்லக்கூடாது;

இ) மருத்துவமனை ஊர்திகள், அவசர ஊர்திகள், பால் வண்டிகள், தண்ணீர் வண்டிகள், அவசர மின் பணி ஊர்திகள், காவல் பணி, அலுவலர்களது தேர்தல் பணி போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் ;

ஈ) நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்கிடையே நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்களில் இயக்கப்படும் பேருந்துகள் போன்ற பொது போக்குவரத்து சாதனங்கள் ;

உ) விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள், மாநில தலைநகர பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள் போன்ற இடங்களுக்குச் செல்ல தவிர்க்க முடியாத பயணங்களை மேற்கொள்ள பயன்படுத்தப்படும் வாடகை மகிழுந்துகள், மூன்று சக்கர வாகனங்கள், ரிக்ஷாக்கள் முதலியன;
ஊ) நோயுற்றவர்கள் அல்லது மாற்றுத் திறனாளிகளால் அவர்களது சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் தனியார் வாகனங்கள்,

XXI. தொண்டர்களுக்கான கட்டுப்பாடுகள், அமைச்சர்கள் / பாதுகாப்பு அளிக்கப்படும் நபர்கள் / பணியாளர்களது இயக்கம் தொடர்பான கட்டுப்பாடுகள்-

- அனைத்து தொண்டர்களும் அடையாள வில்லைகள் அல்லது அடையாள அட்டைகள் அணிந்திருக்க வேண்டும்.

- வாக்காளர்களுக்கு வழங்கப்படும் அதிகாரபூர்வமற்ற அடையாளச் சீட்டுகள் எந்த சின்னமோ, வேட்பாளரின் பெயரோ, கட்சியின் பெயரோ குறிப்பிடப்படாமல் வெள்ளைத்தாளில் இருக்க வேண்டும்.

- வாக்காளர்கள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது தேர்தல் / வாக்குப் பதிவு முகவர்களைத் தவிர, புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தால் குறிப்பான மற்றும் முறையான அதிகாரபூர்வ கடிதம் அளிக்கப்பட்ட நபர்கள் மட்டுமே எந்த வாக்குச் சாவடிக்குள்ளும் நுழைய முடியும். எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் உள்ள பிரமுகருக்கும் இதிலிருந்து விலக்களிக்கப்படமாட்டாது. (எந்த ஒரு அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதியும் எந்த வாக்குச் சாவடிக்குள்ளும் அல்லது வாக்கு எண்ணுமிடத்திலும் நுழையக் கூடாது. வாக்களிப்பதற்காக வாக்காளராக நுழையலாம்),

- பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளவர் என தீர்மானிக்கப்பட்டு அலுவல்சார் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு நபரும் வாக்குப் பதிவு நாளன்று வாக்குச் சாவடி எல்லைக்குள் (200 மீட்டருக்குள்) அவரது பாதுகாவலர்களுடன் நுழையக்கூடாது.

- மேலும், வாக்குப் பதிவு நாளன்று இத்தகைய நபர்கள் உள்ளாட்சி பகுதிக்குள் அவர்களது பாதுகாவலர்களுடன் நடமாடவும் கூடாது.

- அலுவல்சார் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள ஒரு நபர் வாக்காளராகவும் இருக்கும் பட்சத்தில், தான் வாக்களிக்க செல்வதைத் தவிர, பாதுகாவலர்களுடனான தனது நடமாட்டத்தை குறைத்துக் கொள்ள வேண்டும்.

- பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உள்ளவர் என அறியப்பட்டு அதற்காக அலுவல்சார் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு நபரும் அல்லது அவராகவே தனியாக மெய்காப்பாளர்கள் வைத்திருக்கும் நபரும் தேர்தல் முகவராகவோ வாக்குப் பதிவு முகவராகவோ வாக்கு எண்ணுகை முகவராகவோ நியமனம் செய்யப்படக் கூடாது.

XXII. பிரச்சார நேரம் முடிவடைந்தபிறகு உள்ளாட்சி அமைப்பிற்குள் அரசியல் பிரமுகர்கள் இருப்பது தொடர்பான கட்டுப்பாடுகள்

- தொடர்புடைய சட்டக்கூறுகளின்படி, வாக்குப் பதிவு முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணி நேரம் முன்னதாக தேர்தல் பிரசாரம் முடிவுக்கு வருகிறது.

- உள்ளாட்சி அமைப்பின் வாக்காளர்கள் அல்லாது வெளியிலிருந்து அழைத்து வரப்படும் அரசியல் பிரமுகர்கள் / கட்சித் தொண்டர்கள் ஆகியோரின் இருப்பானது சுதந்திரமான மற்றும் நேர்மையான வாக்குப் பதிவிற்கான சூழ்நிலையைக் குறைத்துவிடக்கூடும் என்பதால் தேர்தல் பிரசாரத்திற்கான காலம் முடிவடைந்த உடனேயே இத்தகைய நபர்கள் உள்ளாட்சி அமைப்பிலிருந்து வெளியேறி விடவேண்டும் என ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

- இதற்காக தேர்தலில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் (காவல்துறை உட்பட) இதர நடவடிக்கைகளுடன் பின்வரும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்

- கல்யாண மண்டபங்கள் / சமூக கூடங்கள் / விடுதிகள் மற்றும் விருந்தினர் மாளிகைகளை சோதனையிடுதல்.

- எல்லைகளில் சோதனைச் சாவடிகளை அமைத்தல் மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கு வெளியிலிருந்து வாகனங்கள் இயக்கத்தை சோதனையிடல். அறிய மக்களின் / கூட்டத்தினரின்

- வாக்காளர்கள்தானா என்பதை அடையாளத்தை சரிபார்த்தல்,

XXIII. ஊழல் நடவடிக்கைகள் / தேர்தல் குற்றங்கள்

- பணம் கொடுத்தோ இதர வழிகளிலோ வாக்காளர்களை தூண்டுவது கூடாது மற்றும் தேர்தல்கள் நடைபெறும்போது மது விநியோகித்தலும் கூடாது,

- ஊழல் நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் குற்றங்களான கையூட்டு வழங்குதல், தேவையற்ற செல்வாக்கினை செலுத்துதல், வாக்காளர்களை அச்சுறுத்துதல், ஆள்மாறாட்டம் செய்தல், வாக்குச் சாவடிக்கு 100 மீட்டர் தொலைவிற்குள் வாக்கு சேகரித்தல், வாக்குப் பதிவு முடிவடைவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நேரத்திலிருந்து 48 மணி நேர காலத்தில் பொது கூட்டங்கள் நடத்துதல் மற்றும் வாக்குச் சாவடிகளுக்கு சென்று வர வாக்காளர்களுக்கு வாகன வசதி செய்தல் போன்ற செயல்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

XXIV. சொத்துக்களை உருக்குலைத்தல்

I. பொது இடங்களை உருக்குலைத்தல்

- எந்த ஒரு அரசு வளாகத்திலும் (கட்டிடங்கள் உட்பட) சுவர் எழுத்துக்கள், சுவரொட்டிகளை / தாள்களை ஒட்டுதல் அல்லது வேறு விதங்களில் உருக்குலைத்தல் அல்லது கட்-அவுட்கள், விளம்பரப் பலகைகள் பதாகைகள், கொடிகள் முதலியவற்றை வைத்தல் / காட்சிப்படுத்துதல் ஆகியவை அனுமதிக்கப்படக் கூடாது.

- "புதுச்சேரி திறந்தவெளி (உருக்குலைப்பு தடுப்பு) சட்டம் 2000"-ன்படி 'பொது இடங்கள்' என்பது பொது மக்கள் அணுகவும், செல்லவும் கடக்கவும் உரிமையுள்ள எந்த ஒரு இடத்தையும் (சாலை, தெரு அல்லது வழி - அது கடந்து செல்லக்கூடியதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் மற்றும் நிறுத்தும் இடங்கள்) குறிக்கும்.

- “பொதுமக்களின் பார்வைக்கான இடம் என்பது ஒரு பொது இடத்தில் இருக்கும் அல்லது கடந்து செல்லும் ஒரு நபரின் பார்வையில் படும் வகையில் உள்ள தனியார் இடம் அல்லது கட்டிடம், நினைவிடம், சிலை, கம்பம், சுவர், வேலி, மரம் அல்லது இதர பொருள்கள் அல்லது கருவிகளைக் குறிக்கும். (சட்டப் பிரிவு e மற்றும் f-ன்கீழ் விளக்கத்துடன் படிக்கப்பட்ட பிரிவு 2).

- புதுச்சேரி திறந்தவெளி (உருக்குலைப்பு தடுப்பு) சட்டம், 1959 பிரிவு 3 (1)ன்படி

பொதுமக்கள் பயன்படுத்தும் எந்த இடத்திலும் சுவர் எழுத்துக்கள், சுவரொட்டிகளை / தாள்களை ஒட்டுதல் அல்லது காட்சிப்படுத்துதல், ஆட்சேபனைக்குரிய விளம்பரம் போன்றவற்றை எந்த ஒரு நபரும் செய்யக்கூடாது - இவ்விதிகள் அமல்படுத்தப்பட்ட தேதியிலிருந்து, எந்த ஒரு நபரும் சுவர் எழுத்துக்கள், சுவரொட்டிகளை / தாள்களை ஒட்டுதல் அல்லது காட்சிப்படுத்துதல் போன்றவற்றை பொது மக்கள் பயன்படுத்தும் எந்த இடத்திலும் செய்யக்கூடாது.

i. ஏதாவது ஆட்சேபணைக்குரிய விளம்பரங்கள், அல்லது
ii. அத்தகைய இடம் அமைந்துள்ள இடத்தின் உரிமையாளர் அல்லது பயன்படுத்த உரிமையுள்ளவர் நபரின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல் எந்த விளம்பரமும்.

II. தனியார் இடங்களை உருக்குலைத்தல்-

அ) புதுச்சேரி திறந்தவெளிகள் (உருக்குலைப்புத் தடுப்பு) சட்டம், 2000ன்படி, பொது பார்வையில் படும் இடங்கள் என்பதில் (சட்டப்பிரிவு (2)ன் கீழ், ஒரு பொது இடத்தில் இருக்கும் அல்லது கடந்து செல்லும் ஒரு நபரின் பார்வையில் படும் தனியார் இடம் / கட்டிடம் அடங்கும்,

ஆ) இத்தகைய இடங்களில் உரிமையாளரின் அனுமதியிருந்தாலும் சுவரில் எழுதுவதோ, சுவரொட்டி போன்றவற்றை ஒட்டுவதோ கூடாது.

இ) உள்ளூர் சட்டங்கள் வெளிப்படையாக இது குறித்து அனுமதிக்காதபோதும், இடத்தின் உரிமையாளரின் சம்மதம் பெறப்பட்டுள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில் எந்த சூழ்நிலைகளிலும் இச்செயல் மேற்கொள்ளப்படக் கூடாது.

III. அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள் / முகவர்கள் ஆகியோரின் சொந்த இடங்களில் பதாகைகள், கொடிகள் ஆகியவற்றை காட்சிப்படுத்துதல்

- உள்ளூர் சட்டம் அல்லது எந்த நீதிமன்றத்தாலும் வழங்கப்பட்ட நடைமுறையிலுள்ள ஆணைகளுக்குட்பட்டு அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், அவர்களது முகவர்கள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோர் எந்த கட்சியின், நிறுவனத்தின் அல்லது நபரின் வற்புறுத்தல் இல்லாத நிலையில் தமது சொந்த விருப்பத்தின்பேரில்

தாமாகவே தங்களுடைய சொந்த இடத்தில் யாருக்கும் எவ்வகையிலும் எந்த அசௌகரியமும் ஏற்படாத வகையில் பதாகைகளையும் தோரணங்களையும் கொடிகளையும் கட்-அவுட்களையும் வைத்துக் கொள்ளலாம்.

- ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்கினைப் பெறும் நோக்கில், இத்தகைய பதாகைகள், கொடிகள் முதலியன வைக்கப்பட்டால் இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு 171H ஈர்க்கப்பட்டு அவை பின்பற்றப்படவேண்டும்.

  (ஒரு வேட்பாளரின் எழுத்துப்பூர்வமான, பொதுவான அல்லது சிறப்பு அனுமதியின்றி பொது சுட்டங்கள் நடத்துவதற்காகவும் விளம்பரங்கள், சுற்றறிக்கை அல்லது வெளியீடுகளுக்காகவும் அல்லது வேறு எவ்வகையிலேனும் அந்த வேட்பாளரின் தேர்தல் முன்னேற்றம் மற்றும் இலாபத்திற்காக ஒருவர் செலவு மேற்கொண்டால் அல்லது அச்செலவை மேற்கொள்ள அனுமதித்தால் அது ரூ. 500/- வரையிலான அபராதம் விதிக்கக்கூடிய தண்டனையாகக் கருதப்படும் என இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு 171H விளம்புகிறது. இருப்பினும், அனுமதியின்றி ரூ.10/-க்கு மிகாமல் இச்செலவினங்களை ஒரு நபர் மேற்கொண்டுவிட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் வேட்பாளரின் எழுத்துப்பூர்வமான ஒப்புதலைப் பெறுவாராயின், அவர் உரிய அனுமதியுடனேயே இச்செலவினத்தை மேற்கொண்டவராகக் கருதப்படுவார்.)

IV. கூடங்கள் / அரங்குகள் மற்றும் பிற பொது சொத்துகளை உருக்குலைத்தல்

- அரசுக்கு / உள்ளாட்சி அமைப்புகளுக்கு / பொது துறை நிறுவனங்களுக்கு / கூட்டுறவு நிறுவனங்களுக்கு சொந்தமான கூடங்கள் அரங்குகளைப் பொறுத்தமட்டில் பொதுவாக அரசியல் கூட்டங்கள் நடத்த அனுமதி இல்லை,

உருக்குலைத்தலை களைதல்

- எந்த ஓர் அரசியல் கட்சி / சங்கம் / வேட்பாளர் / நபர், மேற்குறிப்பிட்ட அறிவுரைகளுக்கு எதிராகவும் அல்லது உள்ளூர் சட்டம் ஏதும் இருந்தால் அதற்கு எதிராகவும் எந்த ஒரு சொத்தையும் உருக்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால், தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட தேர்தல் அலுவலர் உடனடியாக அவ்வுருக்குலைப்பை களைப்பதற்க்கு தவறிழைக்கும் அந்நபருக்கு அறிவிப்பு அளிக்க வேண்டும்.

- அரசியல்கட்சி / சங்கம் / வேட்பாளர் / நபர் சரியாக செயற்படவில்லையெனில், மாவட்ட அதிகாரிகள் உருக்குலைப்பை களைய நடவடிக்கை எடுக்கலாம். இந்நடவடிக்கைக்கான செலவினங்கள் உருக்குலைப்புக்குப் பொறுப்பான அரசியல்கட்சி/ சங்கம் / வேட்பாளர் / நபரிடமிருந்து வசூலிக்கப்படும்.

- மேலும், இத்தொகை தொடர்புடைய வேட்பாளரின் தேர்தல் செலவினத்தில் சேர்க்கப்பட வேண்டும் மற்றும் தவறிழைத்தவர் மீது தொடர்புடைய சட்டத்தின் பிரிவுகளின்கீழ் வழக்கு தொடரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். (உருக்குலைப்பு தடுப்பு சட்டம் இருந்தால் அதன் கீழ் அல்லது மற்றவர்களின் சொத்துகளை வேண்டுமென்றே சேதப்படுத்துவதற்கான பொது சட்டத்தின் பிரிவுகளின்கீழ்),

V. வாகனங்களை உருக்குலைத்தல்

- மாவட்ட ஆட்சித் தலைவர் / தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து தேர்தல் பிரச்சாரத்திற்காக உரிய முறையில் பயன்படுத்தப்படும் வாகனம் என்ற வகையில் தேவையான அனுமதி ஆணையைப் பெற்றிருந்தால் மட்டுமே வர்த்தக வாகனங்களில் கொடிகள், ஒட்டு தாள்கள் போன்றவற்றை காட்சிப்படுத்த அனுமதிக்கலாம். அனுமதி ஆணை அசலாக வாகனத்தின் முன்புறக் கண்ணாடியில் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்,
- ஒலிபெருக்கி பொருத்துவது போன்ற வாகனங்களில் செய்யப்படும் வெளிப்புற மாற்றம் மோட்டார் வாகனச் சட்டம் / விதிகள் மற்றும் இதர உள்ளாட்சி சட்டம் / விதிகளின் வழிவகைகளுக்குட்பட்டே இருக்க வேண்டும்.
- உரிய மாறுதல்களுடனான வாகனங்கள் மற்றும் வீடியோ பொருத்தப்பட்ட சிறப்பு பிரசார வாகனங்கள் போன்றவை மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் அதிகாரிகளிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்ற பின்பு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
- புதுச்சேரி திறந்தவெளி (உருக்குலைப்பு தடுப்பு) திருத்தச் சட்டம், 2000- ன்படி எந்த ஒரு நபரும் -

  (அ) மோட்டார் வாகனத்தின் மீது எவ்வகையான சுவரொட்டியையோ அல்லது உருவ பொம்மையையோ அல்லது விளம்பரம், அறிவிப்பு, ஆவணம், தாள் அல்லது வார்த்தைகள் அடங்கிய பிறவற்றையோ குறியீடுகளையோ அல்லது கண்ணுக்கு புலப்படக்கூடிய கோரிக்கைகளையோ வது அல்லது எழுதுவது அல்லது காட்சிப்படுத்துவது கூடாது; அல்லது

(ஆ) மோட்டார் வாகனத்தின் மீது அல்லது அதற்கு மேலாக அமைந்துள்ள கம்பம், தூண், அமைப்பு அல்லது சட்டத்தின் மீது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ சாய்த்து வைக்கப்பட்ட அல்லது இணைத்து வைக்கப்பட்ட நிலையில் தட்டிப்பலகை அல்லது பலகையை வைக்கவோ பொருத்தவோ கூடாது,

- மோட்டார் வாகனத்தின் மீது மாநில அரசால் வைக்கப்படும் சுவரொட்டி அல்லது விளம்பரத்திற்கு இந்த பிரிவில் உள்ள கூறுகள் எவையும் பொருந்தாது.

- அரசு வளாகங்களுக்குள் சுவற்றில் எழுதுவதும் சுவரொட்டிகள் ஒட்டுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. மாநில போக்குவரத்து கழகங்களால் சாலை போக்குவரத்து சேவைக்காக இயக்கப்படும் மோட்டார் வாகனங்களிலும் இத்தகைய நடவடிக்கைகள் அனுமதிக்கப்படமாட்டாது. எனவே, எந்த ஒரு தனியார் அல்லது அரசு வாகனத்திலும் சுவரொட்டியோ விளம்பரமோ அல்லது அறிவிப்போ ஒட்டுவது, பொருத்துவது, எழுதுவது மற்றும் காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

XXV. பிரச்சாரம் தொடர்பான இதர இனங்கள்:

- செலவினங்களை கணக்கு வைத்துக் கொள்வதற்குட்பட்டு கீழ்க்கண்டவற்றை அனுமதிக்கலாம்:

அ) உள்ளூர் சட்டங்கள் மற்றும் தடையாணைகளுக்குட்பட்டு கொடிகள், பதாகைகள், கட் அவுட்கள் போன்றவற்றை ஊர்வலங்களிலும் பேரணிகளிலும் எடுத்துச் செல்லலாம் ;
ஆ) இது போன்ற ஊர்வலங்களில் கட்சி வேட்பாளரால் வழங்கப்படும் சிறப்பு உதிரி சாதனங்களான தொப்பி, முகமூடி, சிறு சால்வை போன்றவையை அனுமதிக்கலாம். இருப்பினும், கட்சி அல்லது வேட்பாளர் முக்கிய உடைகளான சேலை, சட்டை போன்றவற்றை விநியோகிக்க அனுமதிக்கக் கூடாது.
இ) கல்வி நிறுவனங்களும் அவற்றின் மைதானங்களும் அரசியல் பிரச்சாரங்கள் மற்றும் பேரணிகளுக்கு பயன்படுத்தப்படக்கூடாது.

XXVI. தொலைக்காட்சி சேனல்கள், கம்பி வழி இணைப்புகள் அல்லது வானொலியில் அரசியல் சார்ந்த விளம்பரங்கள் செய்தல்

- தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் அல்லது கம்பி வழி இணைப்புகள் / வானொலியில் விளம்பரப்படுத்த விரும்பும் ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சியும் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் அவ்விளம்பரம்

ஒளி / ஒலிபரப்ப தொடங்க உத்தேசிக்கப்படும் நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பாகவே விண்ணப்பிக்க வேண்டும்.

- தனிநபர் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளைப் பொறுத்தமட்டில் ஒளிபரப்பு ஒலிபரப்பு செய்யப்படும் நாளுக்கு ஏழுநாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.

- இது குறித்த விண்ணபத்துடன் உத்தேசிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் மென் நகலோடு உரிய முறையில் ஒப்புகை சான்றிளிக்கப்பட்ட இரண்டு நகல்களும் இணைக்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் விண்ணப்பங்களின் மீது முடிவு செய்யப்படும்போது விளம்பரத்தின் பகுதி நேரடியாகவே நீக்கப்படலாம்/ மாறுதல் செய்யப்படலாம்.

- சான்று கோரும் விண்ணப்பமானது கீழ்க்கண்ட விபரங்களுடன் இருக்க வேண்டும்:

  i. விளம்பரம் தயாரிப்பதற்கான செலவு தொலைக்காட்சி சேனல் அல்லது கம்பி வழி இணைப்பு வானொலி மூலம் விளம்பரத்தை ஒளிபரப்ப / ஒலிபரப்ப ஆகும் உத்தேச செலவு இடைச்செருகல்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு இடைச்செருகலுக்கும் வசூலிக்கப்படும் தொகை

  ii. இந்த விளம்பரம் வேட்பாளர்களின் / கட்சிகளின் தேர்தல் மேம்பாட்டிற்கு எந்த வகையில் பயனுள்ளதாக இருக்கும் என்பது குறித்த சான்றும் இணைக்கப்பட வேண்டும்;

  iii. ஓர் அரசியல் கட்சி அல்லது ஒரு வேட்பாளர் அல்லாத தனிநபரால் விளம்பரம் கொடுக்கப்பட்டால் அவ்விளம்பரமானது அரசியல் கட்சி அல்லது வேட்பாளரது நலனுக்காக கொடுக்கப்படவில்லை எனவும் ஓர் அரசியல் கட்சிக்காக அல்லது அரசியல் கட்சியால் ஒரு வேட்பாளருக்காக அல்லது அவ்வேட்பாளரால் அவ்விளம்பரம் பொறுப்பேற்கப்படவில்லை அல்லது செயல்படுத்தப்படவில்லை அல்லது செலவிடப்படவில்லை எனவும் அந்நபரால் சான்றுரைத்து உறுதியளிக்கப்பட வேண்டும்.

  iv. அனைத்து தொகைகளும் காசோலையாக அல்லது கேட்பு வரைவோலையாக வழங்கப்படும் என சான்று அளித்தல் வேண்டும்.

- பொது அலுவலரே உள்ளாட்சியைப் பொறுத்தவரை தேர்தல் நடத்தும் இவ்விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் நியமன அலுவலர் ஆவார்.

- விளம்பரத்திற்கான சான்று வழங்குவது அல்லது மறுப்பது தொடர்பான முடிவு குறித்த புகார்களையும் / குறைகளையும் ஓர் அரசியல் கட்சி அல்லது ஒரு வேட்பாளர் அல்லது தனிநபரிடம் இருந்து பெற மாவட்ட தேர்தல் அலுவலரே பொறுப்பு அலுவலர் ஆவார்.